24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 156 சித்திரை 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை 03 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஈஸ்ரர் தாக்குதலின் பின்னால் அரச புலனாய்வாளர்கள் சிலர்

## சந்தேகம் கிளப்புகிறார் சுமந்திரன் எம்.பி.



யாழ்ப்பாணம், மே 3

இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள், முன்னைய ஆட்சிக் காலத்திலே இருந்தவர்கள், முன்னைய ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இன்னமும் நடந்து கொண்டிருப்பவர்கள் இப்படியாக நாட்டிலே ஓர் அசாதாரண சூழலை உருவாக்குவதற்காகச் செயற்பட்டிருக்கிறார்கள். அரச தலைவர் தேர்தலில் கோத்தபாயவுக்கு சாதகமாகச் சூழலை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தச் சதித் திட்டங்களும், நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நேற்றுத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன். 04

## அவசரகாலச்சட்ட விதிமுறைகள் மோசமான வகையிலே உள்ளன

### அனுமதி வழங்கிய பின்னர் இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், மே 3
அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்ட விதிமுறைகள் மிகமிக மோசமாக உள்ள என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரி 21

விடுதலைப் புலிகள் மீளெழுச்சி என்று நம்ப வைப்பதற்காக

## இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிலர் கொலை செய்வதற்கும் தயங்கவில்லை

### சுமந்திரன் நேற்று விளாசல்

யாழ்ப்பாணம், மே 3
இராணுவப் புலனாய்வுப் பிரிவிலே இருக்கும் ஒரு பகுதியினர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீளெழுச்சி அடைகின்றனர் என்ற எண்ணக்கருவை நாட்டில் பரப்புவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். அதனை 04

## தற்கொலைதாரிகள் உருவாகுவதற்கு சிங்கள மேலாதிக்கமே ஒரே காரணம்

### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டல்

யாழ்ப்பாணம், மே 3
மிகத் தீவிரமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குத் தயாரான ஒரு குழுவை, அதன் தலைவரான ஸஹ்ரான் ஹாசிம் தயார்ப்படுத்துவதற்கு 21

## வடக்கில் ஏன் பாதுகாப்பு அதிகரித்தது என்பது முட்டாள்த்தனமான கேள்வியாம்

யாழ்ப்பாணம், மே 3
தாக்குதல் நடத்தப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் பார்க்க எதுவித தாக்குதலும் நடத்தப்படாத வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள், சோதனை நடவடிக்கைகள் அதிகமாக உள்ளமை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் ஊடகவியலாளர் 21

## ஈஸ்டர் தாக்குதலுக்கு 4 மில். டொலர் பேரம்

### இஸ்ரேலின் உளவுத்துறை இப்படியொரு தகவல்

டெல்அவிவ், மே 3
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஐ.எஸ். இயக்கத்தால் வழங்கப்பட்டிருக்கலாம் என்று இஸ்ரேலின் இணையப் புல 04

## மன்னார் மாந்தையில் கைத்துப்பாக்கி மீட்பு!

மன்னார், மே 3
மன்னார் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் பாலப்பகுதியில் மார்மப் பொதியில் இருந்து கைத்துப்பாக்கியொன்று நேற்று மீட்கப்பட்டது. 04

## பன்னாட்டு ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பகிரங்கக்கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், மே 3
'நெருக்கடியான காலகட்டங்களில் ஊடக அறிக்கையிடல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு உலக ஊடக சுதந்திர தினமான இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. மக்கள் இதழியல் இயக்கமும் யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்து நடத்துகின்றன. 21

## ஸஹ்ரானின் சகோதரர் வீட்டில் தற்கொலை அங்கி மாட்டியது!

### மாமாவும் மாமியும் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, மே 3
இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் 21

## தாக்குதல் தொடரலாம் என அச்சம் ஞாயிறு ஆராதனைகளுக்குத் தடை

கொழும்பு, மே 3
தேவாலயம் ஒன்றின் மீதும், திருச்சபை நிலையம் ஒன்றின் மீதும் இந்த வாரத்தின் இறுதியில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று தெரிவித்துள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நாளைமறுதின ஆராதனைகளை நடத்த வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களையும், நிறுவனங்களையும் இலக்காகக் கொண்டுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரத்தின் இறுதியிலும் இவ்வாறு தாக்கு 21

பாடசாலைகளுக்கு

## இரண்டாம் தவணை விடுமுறையை குறைப்பதற்கு பரிசீலிக்கப்படுகிறது

கொழும்பு, மே 3
இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட உள்ளமையால் தாமதம 21



8% வட்டியுடன் எளிதாய் செலுத்திட
பல தசாப்தங்களுக்கான சேமிப்பிற்கு
இப்போதே DFCC சோலார் கடன் ஒன்றினை பெற்றிடுங்கள்

DFCC வங்கி அறிமுகப்படுத்திடும் "சோலார் கடன்" ஒன்றினை பெற்று வீட்டிற்கும், வியாபாரத்திற்கும் புதியதோர் பிரகாசத்தினை பெறுவதோடு, அதிகரித்திடும் மின் பட்டியலிற்கோர் முற்றுப்புள்ளி வைத்து, மேலதிக வருவாயினையும் பெற்றிடுங்கள்.

DFCC சோலார் கடன்

- 8% வருடாந்த வட்டி வீதம்
- 50kW வரையிலான வலுச்சக்தி
- நாடளாவிய கிளை வலையமைப்பு

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள் 2019

**இனிமையாகப் பேசுபவர்களே!**
உங்கள் ராசிக்கு 10இல் சந்திரன் இருக்கும்போது தமிழ்ப்புத்தாண்டு பிறப்பதால், நிர்வாகத் திறனும் ஆளுமைத் திறனும் அதிகரிக்கும்.
இதுவரை நீங்கள் உழைத்த உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். வேலைக்குக் காத்திருப்பவர்களுக்கு புது வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் அமையும். குடும்பத்தில் அடிக்கடி மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும்.
ராசிநாதன் சுக்கிரன் ராசிக்கு 5ஆம் வீட்டில் நிற்கும்போது புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதித்துக் காட்டும் மன வலிமை பிறக்கும். ஏமாந்த தொகை இனி கைக்கு வரும். கனிவான பேச்சால் காரியம் முடிப்பீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வாழ்க்கைத்துணைவழியில் இருந்த பிணக்குகள் நீங்கும். பூர்வீகச் சொத்து பங்கைக் கேட்டு வாங்குவீர்கள்.
உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் சனியும், கேதுவும் வருடம் முழுவதும் தொடர்வதால், சோர்ந்து காணப்பட்ட நீங்கள், சோர்வு நீங்கி சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். பெயரும் புகழும் பெற்றுப் பிரபலமடைவீர்கள். நிலம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். நல்லவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதை உணரும் வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டிலிருப்பவர்கள், நண்பர்களுடன் சேர்ந்து வியாபாரம் செய்யும் அமைப்பு உண்டாகும்.
வருடம் முழுவதும் ராகுபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டிலேயே தொடர்வதால் செலவீனங்கள் அதிகரிக்கும். பிதுர்வழிச் சொத்தைப் பெறுவதில் சிக்கல்கள் வரக்கூடும். ஆரோக்கியத்திலும் கவனம்




தேவைப்படும். வருட ஆரம்பம் முதல் 18.5.2019 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு அதிசாரமாக 3ஆம் வீட்டில் நிற்பதால் கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். சுபச் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகளுக்குத் திருமணம் கூடிவரும். மகனின் போக்கில் நல்ல மாற்றம் தென்படும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.
19.5.2019 முதல் 27.10.2019 வரை குருபகவான் 2வது வீட்டிலேயே தொடர்வதால் குடும்பத்தில் அமைதி நிலவும். வழக்குகள் சாதகமாக முடியும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். ஆனால் 28.10.2019 முதல் 27.3.2020 வரை குரு 3ம் வீட்டிற்குச் செல்வதால் காரியத் தடைகள் அதிகரிக்கும். எந்த ஒரு வேலையையும் போராடி முடிக்க வேண்டி வரும். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். தவிர்க்க முடியாத செலவினங்களும் ஏற்படக்கூடும். தந்தைவழி சொத்துகள் வந்து சேரும்.
16.4.2019 முதல் 11.5.2019 வரை மற்றும் 4.2.20 முதல் 29.2.20 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் வாழ்க்கைத் துணைக்கு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.
14.4.19 முதல் 6.5.19 வரை செவ்வாய் 8ல் மறைவதால், உடன்பிறந்தவர்களால் நிம்மதியிழப்பீர்கள். கூடுதல் செலவுகளால் கையிருப்பு கரையும். சொத்துகள் வாங்கும்போது ஆவணங்களை ஒருமுறைக்குப் பலமுறை சரிபார்த்து வாங்கவும். மாணவர்கள் விரும்பிய கல்வி நிறுவனத்தில் சேரும் வாய்ப்பு அமையும். சிலருக்கு வெளிநாட்டில் படிக்க அழைப்பு வரும்.
வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யவும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்களில் லாபம் அதிகரிக்கும்.
உத்தியோகத்தில் உறுதியற்ற நிலை உண்டாகும். சிலரால் ஒதுக்கப்பட்டாலும் மூத்த அதிகாரிகளால் முன்னுக்கு வருவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். ஆனால், எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும்.
கலைத்துறையினர் மற்றவர்களின் பேச்சை நம்பி பெரிய முடிவுகளை எடுக்கவேண்டாம். தமிழ்ப் புத்தாண்டு சுமைகளைச் சுமக்க வைத்தாலும் இறுதியில் வெற்றி கிடைக்கும்.

# ஒவ்வொரு ராசிக்காரர்களிடமுள்ள தீயகுணங்கள்



சோதிடத்தின் படி ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கு அவர்களிடம் இருக்கும் சில கெட்டபழக்கவழக்கங்கள் இதோ...

**மேடம்**
மேட ராசிக்காரர்கள் மோதல் போக்குக் குணத்தைக் கொண்டவர்கள். அதனால் இவர்கள் பேசும்போது கூட சில சமயங்களில் அடிதடிக்குப் போவது போன்றே இருக்கும். வாக்கு வாதம் செய்வதிலும் அடம் பிடிப்பதிலும் இவர்கள் மேலோங்கிக் காணப்படுவார்கள்.

**இடபம்**
இடப ராசிக்காரர்களிடம் அடம்பிடிக்கும் குணம் அதிகமாக இருக்கும். அதனால் இவர்கள் தங்கள் வாழ்வில் தங்களுக்கு எது வேண்டும் என்பதில் தீர்க்கமாக இருப்பார்கள்.

**மிதுனம்**
மிதுனம் ராசிக்காரர்கள் பேரார்வம் மிக்கவர்கள். இவர்களிடம் மிகுந்த ஆவல் இருக்கும். இவர்களுக்கு தாங்கள் செய்யும் செயலை எப்போது நிறுத்த வேண்டும் என்று கூட தெரியாது. அதனால் இவர்களுக்கு தங்களுக்கான பாதையை சரியாக தேர்வு செய்ய தெரியாமல், மிகவும் சிரமப்படுவார்கள்.

**கடகம்**
கடகம் ராசிக்காரர்கள் தங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த தெரியாதவர்கள். இவர்களது உணர்ச்சிகள் அளவுக்கு மீறி மேலோங்கும். அது அன்பு, கோபம் எதுவாக இருந்தாலும் சரி. அனைத்திலும் தொட்டதற்கு எல்லாம் கோபம் கொள்ளும் குணத்தை கொண்டவர்கள்.

**சிம்மம்**
சிம்மம் ராசிக்காரர்களிடம் பொறாமை குணம் அதிகமாக இருக்கும். பொறுமையின்மை மற்றும் அடம் பிடிப்பது ஆகியவை இவர்களிடம் மோசமான குணங்களாக காணப்படும்.

**கன்னி**
கன்னி ராசிக்காரர்கள் நேர்மை குணம் மிக்கவர்கள். அதனால் இவர்கள் எல்லாமே கனகட்சிதமாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.
இவர்களிடம் யாராவது எதாவது மாற்றங்கள் ஏற்படுத்திக் கொள்ள கூறினால், அதிகமாக கோபம் கொள்வார்கள்.

**துலாம்**
துலாம் ராசிக்காரர்கள் தாங்கள் விரும்பும் செயலை சிறப்பாக செய்வதற்கு மனதை ஏற்பாடு செய்துக் கொள்ள நிறைய நேரம் எடுத்துக் கொள்வார்கள். தான் எடுத்த முடிவே சரியா, தவறா என்பது தெரியாமல் தடுமாறுவார்கள்.

**விருச்சிகம்**
விருச்சிகம் ராசிக்காரர்கள் யாராக இருந்தாலும் தங்கள் பேச்சால் மாற்றி விடும் தன்மை கொண்டுள்ளவர்கள். ஆனால் இது இவர்களது மோசமான பழக்கம் என்பது யாருக்கும் தெரியாது.

**தனுசு**
தனுசு ராசிக்காரர்கள் அதிகப்படியான தன்னம்பிக்கை கொண்டவர்கள். ஆனால், அதுவே தன்னால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கை இருக்க கூடாது. அதனால் நம்மால் முடியாத விடயமா என கருதி, சிலவற்றில் கோட்டைவிட்டு விடுவார்கள்.

**மகரம்**
மகரம் ராசிக்காரர்கள் அதிக கூச்சம் சுபாவம் கொண்டவர்கள். இவர்களுக்கு யாருடன் பழகலாம், யாருடன் பழகக் கூடாது என்பதில் சிக்கலாக இருக்கும். ஆனால் இவர்கள் எளிதாக யாரையும் நம்ப மாட்டார்கள்.

**கும்பம்**
கும்பம் ராசிக்காரர்கள் முள் குணம் கொண்டுள்ளவர்கள். மற்றவரது உணர்ச்சியை கொஞ்சம் குத்தி பார்ப்பார்கள். அடம் மற்றும் தான் என்ற குணம் கொஞ்சம் இருக்கும். இவர்களது பிடிவாத குணம் தான் இவர்களிடம் இருக்கும் மோசமான பண்பாகும்.

**மீனம்**
மீனம் ராசிக்காரர்கள் எதையாவது கூறி தங்கள் கடமைகளை செய்வதில் இருந்து நழுவி விடுவார்கள். அவர்கள் முன்னெடுத்த காரியமாக இருக்கலாம். அல்லது அவர்கள் வேலை செய்து வரும் செயலாக இருக்கலாம். ஆனால் இவர்களுக்கு முன் கோபம் அதிகமாக காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 12, பாடசாலை வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 06, பாடசாலை வீதியிலுள்ள இல.12 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனம் சொரியலாக **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரியும், வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியமும், வேலுப்பிள்ளை பரமசாமியும், வேலுப்பிள்ளை இராதுரையும்** சொந்தக்காரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாக இருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1206/03.06.1987 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**தவலிங்கம் திலீபன் பெண் கிருஷ்ணலதா** பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5925/07.02.2007 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியமும் பெண் குந்தாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தவலிங்கம் திலீபன் பெண் கிருஷ்ணலதா** ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது **தவலிங்கம் திலீபன் பெண் கிருஷ்ணலதா** ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.** (CS/25084)(11)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 598
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.05.02
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,914,685/-
வெற்றி இலக்கங்கள்
15 19 25 36 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1565
சீட்டிழுப்பு திகதி 02.05.2019
வெற்றி இலக்கங்கள்
06 32 64 69 D
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.30, 309, 936 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.05.2019
வெற்றி வாரம் 2509
வர்ணம் கபிலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள்
26 42 51 58
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,418,362 /=
03.05.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பப் பிரிவு (1 - 5)
தரம் 6 - 11 (ஆங்கிலம், சிங்களம், தமிழ்) - 077 643 4920







உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 04, மாட்டீன் ஒழுங்கை ஆதன இலக்கம் 36 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் விக்ரர் ஜோன்பிள்ளை என்னும் பெயரில் எமது ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாட்டீன் ஒழுங்கை, 36ஆம் இலக்கத்தைச் சேர்ந்த யோசவ் நீக்கலஸ் இம்மனுவேல் இராசசூரியர் மற்றும் இம்மனுவேல் இராசசூரியர் பெண் வரோணிக்கா, பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 04.11.2018 ஆம் திகதியிட்டு 1423 இலக்கத்தில் நிறைவேறிய ஆட்சிப்பிரகடன உறுதியில் 1938 ஆம் ஆண்டில் இருந்து தம்மில் இரண்டாமவரின் பெற்றோரான, செபஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து மற்றும் சவரிமுத்து பெண் செசெலியா நேசம்மா என்பவர்களது ஆட்சியாகவிருந்ததென வெளிப்படுத்தி பிரகடன உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதன விபரம் : வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று, கரையூர் இறை 'ஒறுவான் தோட்டம்' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.கந்தசாமி அவர்களின் வரைபட இலக்கம் 5055/ 20.04.2019 இல் துண்டு - 1 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 0.28 ஆகும். இதற்கு எல்லை.

கிழக்கு : N.ஜெயபதியின் ஆதனம்.
வடக்கு: அ.கி.இராசபொங்கலனினதும் Dr.M.பகிரதனினதும் ஆதனங்கள்.
மேற்கு :- செகராசசிங்கியினது ஆதனம்.
தெற்கு : தார்சீசியஸ் விவியன் விமலானந்தத்தின் ஆதனம். இதிலுள்ள வீடும், கிணறும் இதடங்கலும், இதைச் சேர்ந்தவைகளனைத்தும்.

தற்போது இவ்வாதனத்தை யோசவ் நீக்கலஸ் இம்மனுவேல் இராசசூரியரும் பெண் வரோணிக்காவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோசவ் நீக்கலஸ் இம்மனுவேல் இராசசூரியரும் பெண் வரோணிக்கா என்னும் பெயரிற்று பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

see more news in
NEWUTHAYAN.COM

## மன்னார்...

குறித்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமான மர்மப்பொதி காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் அடம்பன் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். விரைந்து செயல்பட்ட அடம்பன் பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரையும் அழைத்து குறித்த பகுதியில் சோதனை நடத்தியதோடு, குறித்த மர்மப் பொதியையும் சோதனை செய்தனர். இதன் போது பிளாஸ்ரிக் போத்தலில் கிறீஸ் நிரப்பப்பட்டு அதனுள் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உடனடியாக குறித்த கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளதோடு, குறித்த துப்பாக்கி ஜப்பான் நாட்டு தயாரிப்பு என படையினர் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன (ம-56,60,214)

## இராணுவப்...

வெறும் வதந்தியாக மட்டும் பரப்பாமல், மக்கள் தமது கருத்தை நம்ப வேண்டும் என்பதற்காக கொலைகளைக்கூட அவர்கள் செய்வதற்குத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுமந்திரன்.

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'விடுதலைப் புலிகள் மீளெழுச்சி அடைகின்றனர் என்ற வதந்திகளைப் பரப்புவதற்கும், அதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இருந்த சிலர் கொலைகளைக் கூடச் செய்வதற்கு தயாராக இருந்திருக்கிறார்கள். வவுணதீவில் இடம்பெற்ற சம்பவம் அதை உறுதியாக எங்களுக்குக் காண்பிக்கிறது. அதைப் போல்தான் என்னைக் கொல்வதற்கு தீட்டப்பட்ட சதித்திட்டமும். ஏன்னென்றால் உயிர் அவர்களுக்கு முக்கியமானதல்ல. விடுதலைப் புலிகள் மீளெழுச்சிபெற்று விட்டார்கள் என்ற செய்தியை அனைவரும் நம்ப வேண்டும் என்பது தான் அவர்களுக்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது. அதற்கு அவர்கள் பலரை உபயோகிக்கின்றார்கள். முன்னாள் போராளிகளாக இருந்தாலும்கூட எங்களுக்கு தெரிந்த வகையிலே அவர்களில் சிலர் புலனாய்வாளர்களுடன் வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த 'இரகசியம்'. அதே போல்தான் தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பும். அவர்களும் இவர்களுடன் சேர்ந்து வேலை செய்கின்றார்கள். ஆகவே யார் இவர்களுடன் சேர்ந்து வேலை செய்தார்கள் என்பது எங்களுக்கு தெரியாது ஆனால் இப்படியான தாக்குதல்கள் தயார் செய்யப்பட்டு நடத்தப்பட்டிருக்கின்றன. சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். துரதிஸ்டவசமாக சிலர் இறந்திருக்கிறார்கள், 250க்கும் அதிகமான அப்பாவிகள் உயிரிழந்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் இப்படியான ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு உட்படுத்தப்பட்டதா என்கின்ற மிகப்பெரிய சந்தேகம் இன்றைக்கு எழுந்திருக்கிறது' என்றார். (ம-21)

## ஈஸ்டர்...

னாய்வுத்துறைத் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கையில் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முதல்நாள் 20ஆம் திகதி, ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிட்கொயின் கணக்கில் 5 லட்சம் டொலர்களாக இருந்த இருப்பு, ஒரேநாளில் 45 லட்சம் டொலர்களாக அதிகரித்துள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட தினத்துக்கு மறுநாள் இந்தத் தொகை மீண்டும் 5 லட்சம் டொலர்களாக குறைவடைந்துள்ளது. இதனால் 40 லட்சம் டொலர்கள் (4 மில்லியன்) குறித்த தாக்குதலுக்காக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் செலவிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

## புலனாய்வாளர்களின்...

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். இந்தச் சந்திப்பின்போதே மேற்படி கருத்தை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில நாள்களாக நாடு மிகவும் கொந்தளிப்பிலே இருக்கிறது. மக்கள் எதிர்பாராத மோசமான இந்த தாக்குதல்கள் காரணமாக பலர் பயத்துடனும், மேலும் தாக்குதல்கள் தீவிரமடையலாம் என்ற பீதியிலும் இருக்கிறார்கள். இந்தத் தாக்குதல்களின் பின்னணிக் காரணிகள் தற்போது தெரியவந்து கொண்டிருக்கின்றன. நீண்டநாள் தயார்ப்படுத்தல் நிலையிலே தேசிய தௌஹீத் ஜமாத் என்ற இயக்கத்தை பலர் வளர்த்திருக்கிறார்கள். விசேடமாக அவர்களுக்கு நிதி கொடுக்கப்பட்டுள்ளது. உளவாளிகளுக்கு கொடுப்பதாகச் சொல்லி இராணுவப் புலனாய்விலே இருந்து கிரமமாக நிதி கொடுக்கப்பட்டிருப்பதாக அரச அமைச்சுகளின் மூலம் தெரியவருகிறது. அமைச்சர் ராஜிதவும் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆவணங்கள் இருக்கின்றன என்றும், அவற்றை வெளிப்படுத்துவேன் என்றும் அவர் கூறியிருக்கிறார். இந்த இயக்கத்துக்கும், பாதுகாப்பு அமைச்சினுடைய முன்னாள் அதிகாரிகளுக்கும் இருந்திருக்கிற தொடர்பு விசாரிக்கப்பட வேண்டும் என்று தெளிவாக நான் கூறியிருக்கிறேன்.

இராணுவப் புலனாய்வு, முன்னைய ஆட்சிக் காலத்திலே இருந்தவர்கள், முன்னைய ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இன்னமும் நடந்து கொண்டிருப்பவர்கள் இப்படியாக நாட்டிலே ஒரு அசாதாரண சூழலை உருவாக்குவதற்காக செயற்பட்டிருக்கிறார்கள் என்பது இப்போது எங்களுக்கு தெளிவாகத் தெரிகிறது. பாதுகாப்புத் தரப்பின் மூலமாகவே பணம் கொடுக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டே இந்த இயக்கம் தாக்குதல்களை நடத்தியிருப்பது எங்களுக்குத் தெரியவருகிறது. இந்த முழு விவரங்களும் வெளிப்படுத்தப்படவேண்டும். இவ்வாறான தகவல்களை வெளிப்படுத்தாமல் மூடிமறைக்கக் கூடாது என்பது எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. வீணாகப் பல உயிர்கள் கொல்லப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு ஆள்களுடைய நோக்கங்களுக்காக அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. அதிலும் பெரும்பாலான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பாதுகாப்பு முன்அறிவித்தல்கள், முன்னெச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்ற போதும், அது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமையால் இந்தக் கோரச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. முன்னாள் பாதுகாப்புச் செயலரும், தற்போது கட்டாய விடுமுறையில் அனுப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபரும் தாங்கள் இந்த முன்னெச்சரிக்கையை அரச தலைவருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள் என்ற நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிப்பார்கள் என நான் நம்புகிறேன்.

தனக்குத் தெரிந்திருந்தும் அது பற்றி நடவடிக்கைகள் எடுக்காமல் அரச தலைவர் சுற்றுலாவுக்குச் சென்றிருக்கிறார். வெளிநாட்டிலே இருக்கிற போதும் அவருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. எதையும் பொருட்படுத்தாது அரச தலைவர் செயற்பட்டிருப்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம். சட்டவிரோதமாக பொலிஸ் திணைக்களத்தை அரச தலைவர் பாதுகாப்பு அமைச்சின் கீழே வைத்திருப்பதால் தாக்குதல் சம்பவத்துக்கு முதலாவது பொறுப்பாளியாகின்றார். இந்தச் சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறுவதானது மிகவும் முக்கியமானது. ஆனால் அலுவலர்கள் மத்தியிலே அந்தப் பொறுப்புக் கூறல் நின்றுவிடமுடியாது. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். தலைமை அமைச்சர் தனக்கு எதுவும் கூறப்படவில்லை என்று சொன்னாலும், தேசியபாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்குத் தான் அழைக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்கனவே சொல்லியிருக்க வேண்டும். அதைச் சொல்லாமல் ஆறுமாத காலம் இருந்துவிட்டு அதற்குப் பின்னர் 'எனக்கு எதுவும் தெரியாது' என்று கூறுவது பொறுப்பான ஒரு செயற்பாடாக நாங்கள் கருதமுடியாது. ஆகவே எங்களைப் பொறுத்தவரையிலே இது தவிர்த்திருக்க கூடிய சம்பவங்கள். தவிர்த்திருக்கக் கூடியது என்பது மட்டுமல்ல இதன் பின்னணியிலே பாதுகாப்புத் தரப்பு, விசேடமாக இராணுப் புலனாய்வுப் பிரிவிலே இருந்து சிலர் ஈடுபட்டிருப்பதும், தேசிய தௌஹீத் ஜமாத்துக்கு அவர்கள் மாதாமாதம் சம்பளம் கொடுத்திருப்பதும், வவுண தீவிலே பொலிஸாரைக் கொல்வதற்கும், அதேபோல் வேறுசில தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் அவர்கள் உபயோகிக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளன. இந்த விடயங்கள் முழுமையாக வெளிவர வேண்டும்.

முன்னாள் பாதுகாப்புத் தரப்பு மட்டுமல்ல சில முஸ்லிம் அரசியல் வாதிகளும் இதனை வளர வைப்பதற்கு பலவிதமான உதவிகளைச் செய்துள்ளார்கள் என்பது புலனாகிறது. வெவ்வேறு மட்டங்களிலே அந்த உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பலகாலமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே இவை எல்லாவற்றுக்கும் இவர்கள் அனைவர்களும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள். இந்தச் சம்பவங்கள் அனைத்துக்கும் எங்களுடைய வருத்தத்தை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசிலே நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும்கூட ஏதோ ஒரு விதத்திலே அரசில் எதிர்க்கட்சியும் ஓர் அங்கம். அப்படியான ஓர் இடத்திலே நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலே இருந்து அரசு தவறியது என்கின்ற பொறுப்பை நாங்களும் ஏற்றுக் கொள்கின்றோம். அதற்காக எமது ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார். (ம-21)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **பொன்னம்பலம் மகேஸ்வரன்**

**(கூட்டுறவு பரிசோதகர்)**



மலர்வு 15.10.1959 உதிர்வு 14.04.2018

*அன்புத் தந்தையே!*
*எம்மையும் இப்பூவுலகையும் விட்டுப்*
*பிரிந்து ஓராண்டுகளானாலும்*
*இன்னும் எம் மனங்களில் உயிரூட்டமாய்*
*வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்*
*ஓராண்டு நிறைவுபெறும் இந் நாளில்*
*உம் நினைவு*
*நீங்காமல் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பங்களா வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 05 . 1931



உதிர்வு 02 . 05 . 2019

# திருமதி மங்களம் செல்லத்துரை

கோப்பாயைப்பிறப்பிடமாகவும் சில்லாலை பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்களம் செல்லத்துரை நேற்று (02.05.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நேசம்மா இராசையா, கட்டப்பெம்மன் இராசலிங்கம் மற்றும் வில்லியம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் நீலமோகன் ரங்கநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்வரி பற்குணராசா ஆகியோரின் மாமியாரும் குலவதனி, ஜனார்தனன், மனோஜா ஹரிகரன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2019) வெள்ளிக்கிழமை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் வீதி, பண்டத்தரிப்பு**

தகவல்:
குடும்பத்தினர்.
077 968 3001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி
### 2019 ஆம் வருடத்திற்கான உலர் உணவு வழுங்கல்கள்

**01.05.2019** ஆம் திகதி 5 ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் வெளியிடப்பட்ட உலர் உணவிற்கான கேள்வி அறிவித்தலில் வைத்தியசாலைகளின் விவரத்தில் முதலாவது கட்டத்திலுள்ள **பிரதேச வைத்தியசாலை பூநகரி** என இருப்பதை **பிரதேச வைத்தியசாலை அக்கிராயன்குளம்** எனத்திருத்தி வாசிக்கவும்.

**தலைவர், பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
### உற்பத்தி முகாமையாளர் (ஒப்பந்தம்) பதவி

எமது சங்கத்தின் பால்பொருள் உற்பத்திப் பகுதிக்கு உற்பத்தி முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழுங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுப் பூர்த்திசெய்து 20.05.2019 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவி: உற்பத்தி முகாமையாளர்(ஒப்பந்தம்)**
**சம்பளம்:** மாதாந்தம் ரூபா37000.00 யாவும் உட்படவழுங்கப்படும். (இதற்கான ஊ.சே.நிதி. ஊ.ந.நிதி செலுத்தப்படும்)

**தகைமைகள்:**
(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உணவு விஞ்ஞானமும் போசணையும் (Food Science and Nutrition) பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வெலிசறை/ குண்டகசாலை இரண்டு வருட டிப்ளோமா பயிற்சிநெறிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
(2) ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) பெற்றிருத்தல் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.
(3) கணினி அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.

**பொதுநிபந்தனைகள்:**
1. 20.05.2019 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள். அனுபவம். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்துதல். நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்மையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**02.05.2019** (IN/10089)(11) **தலைவர்**

## வீடு காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
**076 702 3565**

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பிறவுண் வீதியில் கல்வாரிதேவாலய அருகில் உள்ள ஒழுங்கையில் நிலப்பரப்பு 5 கொண்ட ஆதனமானது விற்பனைக்கு உள்ளது.
**076 702 3565** (CS/24537)(11,17)

## வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் (Town) இயங்குகின்ற பிரபலஎலக்ரோனிக்கடைஒன்றிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
**077 160 7757, 077 6913299**

## கடை வாடகைக்குத் தேவை
**கோழி இறைச்சிக்கடை**
நடத்துவதற்கு கடைவாடகைக்கு யாழ்ப்பாணம். மானிப்பாய். கொக்குவில். இணுவில். சித்தன்கேணி ஆகிய இடங்களில் தேவை.
**077 271 8149**

## விற்பனைக்கு
யாழ்ப்பாணத்தில் அராலி வீதியில் 75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 195 6406** (ACO/413)(11,17)

## மணமகள் தேவை
1979 ரேவதி நட்சத்திரம். அரச வேலை M.B.A 3 இல் செவ். சூரி. புதன் குற்றமில்லை. கி.பா $8\frac{1}{2}$. விரும்புவோர் தங்கள் குறிப்புக் களை Viber க்கு அனுப்பி வைக்கவும்.
Viber - **076 707 4576**
T:P - **076 827 7033**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
### அமரர் திருமதி செல்வநாயகி பூபாலசிங்கம்



தோற்றம் 04.10.1950
மறைவு 03.04.2019

யாழ்.நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கடந்த 03.04.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அனைத்து வழிகளிலும் உறுதுணை புரிந்த மற்றும் எங்கள் துயரில் பங்குகொண்டு ஆறுதல் பகிர்ந்த எல்லா நல்லுள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 01.05.2019 அன்று முகத்துவாரம் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. வீட்டுக்கிரியைகள் இன்று 03.05.2019 எமது இல்லத்தில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கொழும்பு தமிழ் சங்கத்தில் அமைந்துள்ள சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
**077 396 0842** **குடும்பத்தினர்.**
(IN/12184)(11,17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சத்தியபாமா மகாராஜா




பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தேவிபுரம் "ஆ" பகுதி புதுக் குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா மகாராஜா நேற்று (02.05.2019)வியாழக்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தை வேலுஅழகர் மற்றும் தவமணி தம்பதியினரின் செல்வப்புதல்வியும் மகாராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கருணாகரன், நஞ்சினிதேவி, சாந்தநாயகி மற்றும் செல்வநாதன் (ஜேர்மன்), வைரவநாதன் (யாழ்ப்பாணம்), தனலட்சுமிதேவி (ஜேர்மன்), சறோஜினிதேவி (தேவிபுரம்), சகுந்தலாதேவி (தேவிபுரம்), பாஸ்கரநாதன் (பிரான்ஸ்), கமலநாதன் (தேவிபுரம்), றோகினிதேவி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கயாளினி, கஜேந்திரன் (பிரான்ஸ்), ஜெகன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜவர்மன், கஜநிலவன், யாழினி, கஸ்வின், றசிந்தன், சஜிதா, பவிசன், கவிசன், கவிசனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சாந்திவர்மன், றஞ்சித்குமார், சுமித்திரா, பிரதீபா ஆகியோரின் மாமியாரும் வன்னியசிங்கம், காலஞ்சென்ற குணரத்தினம், பத்மநாதன் (கனடா), சந்திரன், நந்தினி, சுவாசினி (ஜேர்மன்), செல்வலட்சுமி, உலகநாயகி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(03.05.2019)வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தேவிபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவிபுரம், புதுக்குடியிருப்பு** **தகவல்: குடும்பத்தினர்**



தோற்றம் 25 . 03 . 1950
மறைவு 01 . 05 . 2019

### திருமதி செல்வராணி வேணுகோபால்

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி வேணுகோபால் 01.05.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - யோகமணி தம்பதியரின் மகளும், செல்லத்துரை வேணுகோபால் அவர்களின் அன்பு மனைவியும், குணேஸ்வரி, இரத்தினசாமி, ஜெயபாலசிங்கம், சற்குணசிங்கம், கலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா, சதீஸ், ரேணுகா, சோபனா, பிருந்தா ஆகியோரின் அன்புத் தாயும், சிறீதரன், தாட்ஷாயினி, நிர்மலன், அனுஷன், டினேஸ் ஆகியோரின் அன்பு மாமியும், ஜானுஜா, ஜனார்த், ஜருஷ், கபிஷன், அஸ்மியா, வியாகீசன், கௌசிக், அக்ஷிதா, லக்ஷன்யா, கனிஷ்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**STMS பாடசாலை**
**முன் ஒழுங்கை, சிறுப்பிட்டி, நீர்வேலி.**
**தகவல்: குடும்பத்தினர்**

## கேள்வி அறிவித்தல்
### வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.
### மூலோபாய திட்டம் -2019

01. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். வடமாகாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரராக இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** (தொலைபேசி: 024-2053014, **மின்னஞ்சல் - vnpsnk@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2019.05.06 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினைப் பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** எனும் அலுவலகத்திலிருந்து 2019.05.06 ஆம் திகதியிலிருந்து 2019.05.21 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** எனும் முகவரிக்கு 2019.05.21 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து (63 நாள்கள் (அறுபத்து மூன்றுநாள்கள்) 2019.07.23 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| SDP/VU/VNPS/W/01/2019 | சூரியசக்தியிலிரந்து மின்சக்தி பெறும் பொறிமுறைத் தொகுதி பொருத்துதல் கீழ்வரும் விடயங்கள் கட்டாயமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும் 1. supply and fixing panel including CEB charges as directed by engineer 2. 10 numbers of 1KW Micro inverter with 40 panels (Capacity 12.8 KW) generate monthly around 1500 units 3. module Diamension - 1950mm* 992 mm*40mm 4. module weight - 23kg 5. power out put -300W/320w | 1.96 | 3மாதம் | C8 | 20,000.00 | 2019.08.20 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.05.14 ஆம் திகதி 14.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளகேள்விதாரர் தமது செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு, வவுனியா வடக்குபிரதேச சபை, நெடுங்கேணி.** (IN/10074)(11,17) **2019.05.03**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.03.2019 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவர்

## அமரர் செல்லையா இராசலிங்கம்


அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 04.05.2019 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

புலவனார் வீதி, கல்வியங்காடு.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 05 . 1941

மறைவு
02 . 05 . 2019

## திருமதி அன்னலட்சுமி கோணேசலிங்கம்

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கோணேசலிங்கம் நேற்று (02.05.2019) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோணேசலிங்கத்தின் அன்பு மனைவியும், மீனா (இணுவில்), திலகா (சுவிஸ்), நிம்மி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், இராசலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும், காராளசிங்கம் (லண்டன்), முத்துலட்சுமி (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், Dr. கமலநாதன் (அளவெட்டி பிரதேச வைத்திய சாலை -DMO), கோணேஸ்வரசிங்கம் (சுவிஸ்), முனீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ருக்குமணிதேவி (கொழும்பு), சத்தியபாமாதேவி (மலேசியா), மகேந்திராதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், கந்தசாமி, கிருஸ்ண லிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆர்த்திகா, ஆருண்யா, அபிநயா, கார்த்திக், கீர்த்திக், பிரணவன், பிரவீனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"மாசிவன் சந்தி" ராஜவீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

(CS/25088)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 361 8720, 077 294 7285**

**உதயன்**
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com

**தேவை**

மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. மற்றும் விற்பனை பிரதிநிதி (ஆண்) தேவை.

தொடர்பு - 076 360 464, 076 640 3388



## அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில்
## வருடாந்த வெளிமடை உற்சவம் - 2019

*நிகழும் விகாரி வருடம் சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் (10.05.2019) வெள்ளிக்கிழமை முதல் மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.*

1. விளக்கு வைப்பு :- 03.05.2019 வெள்ளிக்கிழமை
   காலை பூசையுடன் நடைபெறும்.
2. மடைப் பண்டம் எடுத்தல் :- 10.05.2019 வெள்ளிக்கிழமை
   பிற்பகல் 4 மணி பூசையைத் தொடர்ந்து இடம்பெறும்.
3. வெளிமடைப் பூசை :- 11.05.2019 சனிக்கிழமை
   காலை 7 மணிக்கு நடைபெறும்.
4. 8ஆம் மடை :- 17.05.2019 வெள்ளிக்கிழமை
   மாலைப் பூசையுடன் நடைபெறும்.

★ இவ்வருடம் ஆலய வீதியில் வியாபார நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளது.

- தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்
தரும பரிபாலனசபை -


02.05.2019

# கண்ணீர் அஞ்சலி

கடந்த (01.05.2019) புதன்கிழமை
இறைபதமடைந்த

## பிரம்ம ஸ்ரீ இரா. சந்திரசேகர சர்மா

*(பிரசித்திபெற்ற எழுத்தாளரும், இளைப்பாறிய விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகரும் முன்னாள் திட்டப்பணிப்பாளர், ஆலோசகர் - சாந்திகம்)*



அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர் தயா சோமசுந்தரம்**
**மற்றும் உளசமூகப் பயிற்றுவிப்பாளர்கள்**
**1 ஆம் அணியினர் - சாந்திகம்**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## செல்லையா மகாதேவன்

திதி: சதுர்த்தசி

தோற்றம்
09.01.1937

மறைவு
25.04.2017

ஆண்டிரண்டுகள் மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம் எங்கள் உயிர்
உள்ளவரை உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சொத்து

வில்லியனூரில், கேசவன் என்ற பணக்கார வணிகர் இருந்தார். அவருக்கு, நான்கு பிள்ளைகள். ஒரு நாள் அவருக்கு நோய் வந்து, படுக்கையில் விழுந்தார். "இனி பிழைக்க மாட்டோம்" என்று தெரிந்து, நான்கு பிள்ளைகளையும் கூப்பிட்டார்.

"பிள்ளைகளே... நான் இறந்த பின், சொத்துக்கள் குறித்து, விரோதம் வரக் கூடும்; எனவே, முன் கூட்டியே, நான்கு செப்புக் குடங்களில், சொத்துக்களை போட்டு, இந்த கட்டிலின் கீழே புதைத்திருக்கிறேன்".

"நான் இறந்த பின், நான்கு குடங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்; நான்கு குடமும் வரிசையாக இராது; ஒன்றன் கீழ் ஒன்றாக புதைத்துள்ளேன். முதல் குடத்தை, முதல் மகன் எடுத்துக் கொள்ளட்டும்... இப்படியே வரிசையாக எடுத்துக் கொள்ளுங்கள்..." என்றார்.

இதை கூறிய சில நாள்களில், இறந்து விட்டார். கட்டிலின் கீழே, தந்தை புதைத்து வைத்திருக்கும், செப்புக் குடங்களை எடுத்துக் கொள்ள விரும்பினர்.

ஒரு நாள் நால்வரும் ஒன்றாக சேர்ந்து, கட்டிலின் கீழே தோண்டினர்; சிறிது துாரம் தோண்டியதும், ஒரு செப்பு குடம் கிடைத்தது. அதை, மூத்தவன் திறந்துப் பார்த்தான்; உள்ளே மண் இருந்தது; அது நிறைய தங்கமும், வெள்ளியும் இருக்கும் என்று எதிர்பார்த்த அவனுக்கு, ஏமாற்றம் ஏற்பட்டது.

இரண்டாவது மகன், மீண்டும் தோண்டினான் சிறிது ஆழம் தோண்டியதும், மற்றொரு செப்புக் குடம் கிடைத்தது. அதை, ஆவலுடன் எடுத்துப் பார்த்தான். அதற்குள் வைக்கோல் இருந்தது. அவனுக்கும், ஏமாற்றமாக இருந்தது.

மூன்றாவது மகன், தன்னுடைய குடத்தை திறந்து பார்த்த போது, அதில், வெறும் எலும்புத் துண்டு இருந்தது. அவனுக்கும் ஏமாற்றமாகி விட்டது.

நான்காவது மகன், குடத்தை திறந்து பார்த்த போது, அதில் கரித்துண்டுகள் இருந்தன.

ஏமாற்றமடைந்த நால்வரும், மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள, உஜ்ஜய்னி நகரத்தை ஆண்டு வந்த புகழ் பெற்ற மன்னரான விக்கிரமாதித்தரின் சபைக்கு சென்றனர்.

இவற்றை விசாரித்த விக்கிரமாதித்தர், "உங்கள் தந்தை, தன்னுடைய சொத்துக்களை எவரெவர் எதை எதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு சில அடையாளங்கள் வைத்துள்ளார்".

"அதாவது, முதல் குடத்திலிருந்த, மண், நிலத்தை குறிக்கும். முதல் மகன், நிலங்கள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது மகன் தானிய வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவது மகன் கால்நடைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நான்காவது மகன் தங்கம், வெள்ளி ஆபரணங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்..."" என்று தீர்ப்பு வழங்கினார்.

விக்கிரமாதித்தரின் தீர்ப்பை கேட்ட மகன்களும், மக்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்!



## வர்ணம் தீட்டுவோம்




## மரண அறிவித்தல்கள்

### திருமதி திலகவதி சதாசிவம்



24/A, கொண்டலடிவீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி திலகவதி சதாசிவம் 01.05.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

24/A, கொண்டலடி வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி தேவகடாச்சம் விசாலாட்சி

அராலி மேற்கு, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவகடாச்சம் விசாலாட்சி நேற்று (02.05.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



தோற்றம் 08.07.1944 மறைவு 02.05.2019

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: நகுலேஸ்வரன் (மகன்)
077 656 7422

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

### திருமதி குணலட்சுமி (மணி) சிவபாதம்



தோற்றம் 15.12.1941 மறைவு 02.05.2019

தம்பயப்புலம் அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணலட்சுமி சிவபாதம் நேற்று (02.05.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணசாமி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் சிவபாதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, இராஜேஸ்வரி மற்றும் குணலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாநந்தினி, வித்பவானந்தன் (டுபாய்), பிரதீபராஜ் (கனடா), சிவகெளரி (ஆஸ்திரேலியா), சிவராமன் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகரத்தினம், வினோதினி, நேசமலர் (கனடா), சசிகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்ஜீவன், பாணுஜன், ஜதுர்சன், சிந்துஜா, நிஷானா, அபிஷனா, நம்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2019) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பயப்புலம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
077 336 5084, 077 545 5746

(CS/15/18)25094

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சிஅம்மா துரைராஜா



தும்பளை வீதி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கோயிற்குடியிருப்பு கயிலாயப்பிள்ளை வீதி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சிஅம்மாதுரைராஜா நேற்று (02.05.2019) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

[illegible]
ஒழுங்கை, சாவகச்சேரி.

தகவல்:
து. [illegible]ஸ்வரன் (பெரியராசா)
077 314 4758

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில்
ஆறு கடைகளைக் கொண்ட
கட்டடத் தொகுதி
K.K.S வீதியில்
விற்பனைக்குண்டு.
076 195 6406


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உண்மையை அறியும் மக்கள் குழுவின் அவசியம்

உயிர்த்த ஞாயிறு நாள் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகளைச் செய்தவர்களில் சிலர் அரச புலனாய்வுப் பிரிவினரின் கொடுப்பனவுப் பட்டியலில் இருந்தவர்கள், அதாவது ஒட்டுப்படையினராக இயங்கியவர்கள் என்ற தகவலை அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளிப்படுத்திய கையோடு, முன்னாள் ஆட்சியாளர்களுக்கு விசுவாசமான அரச படையினரின் உதவியுடனேயே குண்டுத் தாக்குதல் சதி இடம்பெற்றிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏப்ரகாம் சுமந்திரன். தாக்குதல் நடந்த கையோடு, அரச தலைவர் தேர்தலில் தான் போட்டியிடப் போகிறேன் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இளைய சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்த கருத்தையும் இந்தச் சதிப் பின்னணியோடு தொடர்புபடுத்திச் சில சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார் அவர். அவற்றுக்கு விடை காணப்பட வேண்டியது அவசியம்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் ஆகக்குறைந்தது 250 அப்பாவிகளின் உயிர்களையாவது காவு கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய அரசு என்கிற தீவிரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டாலும் உள்ளூர்வாசிகளே தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தேசிய தௌவ்ஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

அந்த அமைப்பின் செயலராக இருந்தவரும் மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸாரின் கொலைகளின் சூத்திரதாரி எனக் கருதப்படுபவருமான அப்துல் ராசிக் என்பவர் அரச புலனாய்வுப் பிரிவின் கொடுப்பனவுப் பட்டியலில் இருந்துள்ளார் என்பதை அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளிப்படுத்தியிருந்தார். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்று நிழல் நிதி அமைச்சரும் தெரிவித்திருந்தார். அதாவது அரச புலனாய்வுப் பிரிவின் இரகசிய முகவராக இயங்கியவர்களில் ஒருவரே ராசிக் என அதிகாரத்தில் உள்ளவர்களே உறுதிப்படுத்தியுள்ளனர். இது தவிர தேசிய தௌவ்ஹீத் ஜமாத்தின் 24 உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன என்பதையும் அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இத்தகையவர்களே உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய பின்னணியில், அரச புலனாய்வுப் பிரிவில் இருக்கும் முன்னாள் ஆட்சியாளர்களுக்கு வேண்டப்பட்ட, விசுவாசமான சில அதிகாரிகளே பின்னணியில் இருந்து இந்தக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியிருக்கலாம் என்பதே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எழுப்பும் சந்தேகம்.

நாடு பாதுகாப்பற்ற நிலைக்குச் சென்றுள்ளது, எனவே உறுதியான தலைவர் ஒருவர் அதிலும் பயங்கரவாதச் செயல்களை அடக்கி ஒடுக்கக்கூடிய திறமை வாய்ந்த தலைவர் ஒருவர் வந்தால் மட்டுமே நாட்டின் பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும் என்கிற எண்ணம் இலங்கை மக்களின் மனங்களில் ஏற்படத்தக்க வகையில் திட்டமிட்டு இந்தக் குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டி ருக்கலாம் என்பதே நாடாளுமன்ற உறுப்பினர் கூற முற்படும் சதித் திட்டம்.

குண்டு வெடிப்புக்கள் நிகழந்த கையோடு அரச தலைவர் தேர்தலில் நிற்பதற்குத் தான் தயார் என்கிற கோத்தபாயவின் அறிவிப்பு மற்றும் அமெரிக்கக் குடியுரிமையிலிருந்து விலகி இலங்கைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முழுத் தகுதியையும் தான் கொண்டிருக்கின்றேன் என்கிற அறிவிப்பு போன்றவற்றைப் பின்னணியாகக் கொண்டு இந்தச் சந்தேகத்தை மதியாபரணம் ஏப்ரகாம் சுமந்திரன் எழுப்புகிறார்.

அவரது சந்தேகம் நியாயமானது. நாட்டின் தலைவராக வரும் எண்ணத்தோடு இருக்கக்கூடிய ஒருவர் அதற்காக நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைப் பலி கொடுக்கவும் தயங்காதவரா என்கிற கேள்விக்கு அவர் தேர்தலில் நிற்பதற்கு முன்னர் விடை காணப்படுவதும் அவசியம்.

ஆனால், இந்தச் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் யார் விடையைக் கண்டுபிடிப்பது. பொலிஸாரோ அல்லது அரச தலைவர் நியமித்துள்ள ஆணைக்குழுவினரோ இந்தச் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இது தொடர்பில் உண்மையை அறியவேண்டுமானால் உண்மைய அறியும் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும். அதனை அரசுதான் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதுதான் தொடர் சட்ட நடவடிக்கைகளுக்கும் வசதியாக அமையும். அப்படியில்லாதபட்சத்தில் சுயாதீனமான, நிபுணத்துவம் வாய்ந்தவர்களைக் கொண்ட தன்னிச்சையான மக்கள் உண்மை அறியும் குழு ஒன்றை நியமித்து நாட்டு மக்களுக்கு உண்மை தெளிவுபடுத்தப்படவேண்டும். சந்தேகத்தை எழுப்புவதோடு நின்றுவிடாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கான பணியை முன்னெடுக்குமா?

# அஸ்ரிபாவின் திருமணவாழ்வு 19வயதில் முடிவுக்கு வந்தது

## மோதலின் நடுவே சிக்கி உயிரிழந்த சோகம்



பதினாறு வயதாகும் போது திருமண உறவில் இணைந்து கொண்ட அஸ்ரிபாவுக்கு இப்போது வயது 19. ஆனால், அஸ்ரிபா உயிருடன் இல்லை. சாய்ந்தமருதில் பயங்கரவாதிகளுக்கும் படையினருக்கும் இடையில், அண்மையில் நடைபெற்ற சண்டையின் நடுவில் சிக்கி, அஸ்ரிபா இறந்து விட்டார் என்கிறார் அவரின் தாயார் ஹிதாயா. சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி வீட்டுத் திட்டத்தில் தனது கணவருடன் அஸ்ரிபா வாழ்ந்து வந்தார். அங்குள்ள வேறொரு வீட்டில் அஸ்ரிபாவின் பெற்றோர் குடும்பத்துடன் இருக்கின்றார்கள்.

'சம்பவ தினத்தன்று அஸ்ரிபாவும் அவரது கணவரும் அவர்களின் முச்சக்கர வண்டியில் கல்முனைக்குடியிலுள்ள அஸ்ரிபாவின் மாமியார் வீட்டுக்கு சென்றிருந்தார்கள். நாங்கள் பொலிவேரியன் வீட்டில் இருந்தோம். இரவு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. இங்குள்ள மக்கள் எல்லோரும் பயந்து கலவரப்பட்டு அவரவர் வீடு களுக்குள் புகுந்து கொண்டனர். அப்போது அஸ்ரிபாவை கைப்பேசியில் தொடர்பு கொண்டு கதைத்தேன். விவரத்தைக் கூறி, இங்கு இப்போது வரவேண்டாம், நாளை வாருங்கள் என்றும் கூறினேன். ஆனால், அவர்கள் அதையும் கேளாமல் வந்து, இதற்குள் மாட்டிக் கொண்டார்கள்' என்று அஸ்ரிபாவின் தாய் ஹிதாயா கூறுகிறார்.

அஸ்ரிபாவுக்கு நான்கு சகோதரிகள். அஸ்ரிபாதான் மூத்தவர். 2016ஆம் ஆண்டு கல்முனைக்குடியைச் சேர்ந்த ஜாசிர் என்பவர் அஸ்ரிபாவை திருமணம் முடித்தார்.

'எங்கள் வீட்டில் ஆண் பிள்ளைகள் இல்லை என்பதற்காகத்தான், அஸ்ரிபாவுக்கு 16 வயதிலேயே திருமணம் முடித்து வைத்தோம். மகன் ஸ்தானத்தில் ஒரு மருமகன் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். அதுபோலவே அஸ்ரிபாவின் கணவரும் இருந்தார். எங்களை பெற்றோர் போலவே பார்த்துக் கொண்டார்' என்று அஸ்ரிபாவின் தந்தை அக்பீல் அழுகையை அடக்கிக் கொண்டு கூறினார்.

சம்பவ தினத்தன்று நடந்த மேலதிக விடயங்களை அஸ்ரிபாவின் தாய் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

'அன்று இரவு முழுவதும் அஸ்ரிபாவின் கைப்பேசிக்கு அழைப்பு எடுத்து இடைக்கிடையே பேசிக் கொண்டேயிருந்தேன். ஒரு கட்டத்தில் எனது அழைப்புக்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை. சம்பவ தினம் அதிகாலை இரண்டரை மணியிருக்கும் எங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எனது மருமகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அழைப்பெடுத்தவர் கூறினார். ஆனால், அஸ்ரிபாவின் நிலை என்ன என்பதை அவர் எமக்குச் சொல்லவில்லை.

அந்த சம்பவம் நடந்து மறுநாள் காலை, பொலிவேரியன் பகுதிக்குள் நுழையும் பிரதான பாதையில் நிறுத்தப்பட்டிருந்த நீல நிற முச்சக்கரவண்டியி லிருந்து அஸ்ரிபாவின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. அதில் பயணித்த அஸ்ரிபாவின் கணவரும் மாமியாரும் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் முன்னதாகவே சேர்க்கப்பட்டனர். அவர்களுடன் பயணித்த அஸ்ரிபாவின் கணவருடைய சகோதரி, காயங்கள் ஏதுமின்றி உயிர் தப்பினார்' என்றார்.

அஸ்ரிபாவுக்கு என்ன நடந்தது என்பதில் அவரின் தாயாரும் தந்தையும் மாறுபட்ட தகவல்களை பகிர்ந்து கொண்டனர். படையினரின் துப்பாக்கிச் சூட்டிலேயே தனது மகள் உயிரிழந்ததாக அஸ்ரிபாவின் தாயார் கூறுகிறார். ஆனால், சம்பவத்தை தாங்கள் நேரடியாகக் காணவில்லை என்பதால், யாரின் தாக்குதலில் தனது மகள் சாவடைந்தார் என்பதைக் கூற முடியாது என்கிறார் அஸ்ரிபாவின் தந்தை.

'திருணமாகி 41ஆவது நாளிலேயே அஸ்ரிபாவின் கணவர், தொழில் நிமித்தமாக வெளிநாடு சென்றிருந்தார். இரண்டு வருடங்களின் பின்னர், கடந்த வருடம் நோன்பு மாதம்தான், மீண்டும் அவர் ஊர் வந்தார். அவர்கள் இன்னும் வாழவே ஆரம்பிக்கவில்லை. அதற்குள் இப்படியாகி விட்டது' என்று அழுகின்றார்கள் அஸ்ரிபாவின் உறவினர்கள்.

அஸ்ரிபாவின் வீடு பூட்டியிருந்தது. சாவி கிடைக்காததால், வீட்டுக் கதவில் தொங்கிய பூட்டை, அவரின் தந்தை உடைத்துக் கொண்டுதான் உள்ளே அழைத்துச் சென்றார்.

அஸ்ரிபாவுக்கு அவரின் கணவர் அன்புடன் வாங்கிக் கொடுத்த பொருள்களையெல்லாம், ஒவ்வொன்றாகக் காண்பித்தவாறே அஸ்ரிபாவின் தாய் அழுகின்றார்.

'அஸ்ரிபா கிளியொன்றை வளர்த்தார். அவர் இறந்த மறுநாளே அந்தக் கிளியும் செத்துப் போய் விட்டது' என்று அங்கிருந்த கிளிக் கூட்டைக் காட்டி, அஸ்ரிபாவின் தாயார் கண்ணீர் சிந்தினார்.

'அஸ்ரிபாவுக்கு சிறிய வயதில் திருமணம் செய்து வைத்தோம். அதனால், அஸ்ரிபாவை அவரின் கணவர் ஒரு குழந்தை போலவே பார்த்துக் கொண்டார். இந்த வீட்டிலுள்ள பொருள்களைப் பார்த்தாலே, அதனைப் புரிந்து கொள்ள முடியும்' என்று கூறி, அஸ்ரிபாவின் பாட்டி சத்தமிட்டு அழுகின்றார்.

*நன்றி பி.பி.சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா சரிவரவேமாட்டார்

## அமைச்சுப் பதவி குறித்து அரச தலைவர் விமர்சனம்

கொழும்பு, மே 3

சரத் பொன்சேகாவுக்கு வனவள அமைச்சைக் கூட ஒழுங்காக முகாமைசெய்ய முடியவில்லை. இதில் சட்ட ஒழுங்கு அமைச்சைக் கொடுத்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆடை அணிந்து கொண்டா இப்படியெல்லாம் உங்களால் கேட்க முடிகிறது? இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களைப் பார்த்து கேள்வியெழுப்பியிருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

சரத் பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவியை வழங்க யோசனை செய்யுமாறும் தேவைப்படின் யாரவது ஒருவர் அமைச்சுப் பதவியை இழந்து வெற்றிடத்தை ஏற்படுத்துவார்களென்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் குழுவொன்று அண்மையில் அரச தலைவரைச் சந்தித்துப் பேசியபோது கேட்டுள்ளது. இதன்போதே இவ்வாறு தெரிவித்தாராம் மைத்திரிபால சிறிசேன.

சாகல ரத்னாயக்கவுக்கு இந்த அமைச்சை கொடுக்கச் சொன்னீர்கள் கொடுத்தேன். பின்னர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு கொடுக்கச்சொன்னீர்கள் கொடுத்தேன். இருவரும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு பொலிஸ் திணைக்களத்தை கொண்டு சென்றனர். நான் சொன்ன பல விடயங்களை உதாசீனப்படுத்தினர். இப்போது சரத் பொன்சேகாவுக்கு வழங்குமாறு கூறுகிறீர்கள். அவருக்கு வனவள அமைச்சையே ஒழுங்காக செய்து கொள்ள முடியாமல் போனது. இதில் இது தேவையா? பாதுகாப்பு உயரதிகாரிகள் பொன்சேகாவை விரும்ப வில்லை. எனவே மீண்டும் இதனை நான் யாருக்கும் வழங்குவதாக இல்லை' என்று மைத்திரி குறித்த சந்திப்பில் திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# மோதலை விலக்கும்போது தள்ளிவிட்டதால் குடும்பத் தலைவர் தலை அடிபட்டுச் சாவு

கொழும்பு, மே 3

இரு குழுவி னருக்கிடையில் இடம்பெற்ற மோதலை விலக்க முற்பட்டவரை மற்றொருவர் தள்ளியதால் சுவருடன் தலை அடிபட்டு உயிரிழந்தார் என்று நாவலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி இம்புள்பிட்டிய கீழ்ப்பிரிவு தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இது இடம்பெற்றது. மோதலில் தனது உறவினர் ஒரு ஈடுபட்டதால் மோதலை விலக்க முற்பட்ட போது மற்றொருவர் இவரைப் பிடித்துத் தள்ளியதால் தலைப்பகுதி சுவரில் மோதி வீழ்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று ஆரம்ப விசாரணையில் பொலிஸார் கூறியுள் ளனர்.

74 வயதுடைய அவர் இரண்டு பிள்ளை களின் தந்தை. இதனுடன் தொடர்புடைய குற்றச்சா ட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# தேசிய அடையாள அட்டையினை பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே 3

ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸாரால் சோதனை இடம்பெறுவதால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள ஆட்பதிவுதிணைக்களத்துக்கு வருவோரின் தொகை அதிகரித்துள்ளது என்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

நாளாந்தம் ஆயிரத்து 600 தேசிய அடையாள அட்டைகளே விநியோகிக்கப்பட்ட நிலையில் தற்போது 2 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக் கப்படுகின்றன என்று தெரியவருகின்றது. (ம)

### கோத்தா முன்னிலையில் கடந்தவாரம்

# மகிந்த அமைத்த இராணுவக் கட்டமைப்பு நாட்டில் ராணுவ ஆட்சிக்கு வித்திடவுள்ளது

## கூட்டமைப்பு எம்.பி. கோடீஸ்வரன் எச்சரிக்கை

அம்பாறை, மே 3

நாட்டில் பலம் வாய்ந்த இராணுவக் கட்டமைப்பு உள்ளபோது இன்னுமொரு இராணுவ கட்டமைப்பு (மகிந்த கடந்த வாரம் உருவாக்கியது) உருவாவது நாட்டின் இறைமைக்கு விடுக்கும் எச்சரிக்கையே என்று தமிழ்த்தேசியக் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவரின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இராணுவமும் புலனாய்வுப் பிரிவும் பலம் வாய்ந்ததாக உள்ளன. அரசியல் காரணங்களுக்காக அவர்களுக்கான அதிகாரத்தை இந்த அரசு வழங்கவில்லை. இதனாலேயே இந்த நிலை உருவானது.

பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்புச் சபையின் கீழ் செயற்படவேண்டிய நிலையில், இங்கு தற்போது இரு இராணுவ கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று அரசின் இராணுவ கட்டமைப்பு. மற்றையது மகிந்த ராஜபக்ச உருவாக்கியது. (இராணுவ முன்னாள் உயர் அதிகாரிகளைக் கொண்டு மகிந்த கடந்த வாரம் உருவாக்கியது.)

மகிந்த உருவாக்கிய இராணுவக் கட்டமைப்பு நாட்டின் இறைமைக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவுள்ளது. இது நாட்டில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கு வழிகோலும். ஒரு பக்கம் அரச இராணுவம் நாட்டை பாதுகாக்க, மற்றைய இராணுவ கட்டமைப்பு உருவாவது நாட்டைச் சீர்குலைக்கும் அல்லது இராணுவ புரட்சி ஏற்படுத்தும் வாய்ப்பை உருவாக்கும்.

**ஒரே கட்டமைப்பை ஏற்படுத்தவும்**

ஆகவே நாட்டில் ஒரேயொரு இராணுவக் கட்டமைப்பு மாத்திரமே செயற்பட அனுமதிக்க வேண்டும். அரசதலைவரின் பின்னால் சில அரசியல்வாதிகள். தலைமை அமைச்சரின் பின்னால் சில அரசியல்வாதிகள். எதிர்க்கட்சித் தலைவர் பின்னால் சில அரசியல்வாதிகள் என பிரிந்து செயற்படுவதை நிறுத்தி பிரிந்து கிடக்கும் பெரும் கட்சிகள் ஒன்றிணைந்து ஓர் அரசை, ஓர் இராணுவக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**தகுதியற்றவர்**

கிழக்கு மக்களால் நிராகரிக்கபட்ட ஒருவருக்கு நியமன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பின்னர் கிழக்கு ஆளுநர் பதவியும் அரசதலைவர் வழங்கியுள்ளார். அவர் முஸ்லிம் மக்களையும் இளைஞர்களையும் கொண்டு நாட்டில் குருதிக் களரியை ஏற்படுத்துவேன் என்று நாடாளுமன்றில் அப்போது குரல் கொடுத்தவர். அவரது காணொலி நாட்டின் நீதித்துறையையும் அவர் ஏமாற்றியதை அறிய முடிகின்றது.

மதங்களுடன், இனங்களுடன் இணைந்து செயலாற்ற முடியாத ஒருவருக்கு அரசதலைவர் ஆளுநர் பதவி வழங்கியுள்ளார். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அது மட்டுமல்லாது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பில் பேரணியை நடத்துவதற்கு தமிழர்கள் கடந்த 21ஆம் திகதி திட்டமிட்டனர். அந்த பேரணியில் கலந்து கொள்கின்றவர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பி செல்லமாட்டார்கள் என்று [illegible] நாள் கிழக்கு முஸ்லிம் எனும் பெயரில் இயங்கும் முகநூல் உள்ளிட்ட சில முகநூல்களில் வெளிப்படுத்தப்பட்டது.

**எச்சரிக்கை**

இதனடிப்படையில் பார்க்கும் போது தேசிய தௌபீக் ஜமாத் அமைப்புக்கும் இதற்கும்தொடர்புள்ளதா? ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கும் தொடர்புள்ளதா? இது பற்றி ஆராய வேண்டியுள்ளது. இதன் பின்னணியில் சில அமைச்சர்களும் இருக்கக்கூடும். இதன் மூலம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட்டக்கூடாது என்பதில் அவர்கள் அதிக அக்கறை காட்டியுள்ளமை புலனாகின்றது. இறைவன் அருளால் அன்று நடைபெறவிருந்த பேரணி தடைப்பட்டது. பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

**கிழக்கிஸ்தான்**

எனவே மூவின மக்களும் ஒன்றாக இணைந்து வாழக்கூடிய சாதகமான கட்டமைப்பை உருவாக்கி நாட்டின் இறைமையைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிரவாதிகள் கிழக்கை மையப்படுத்தியே கிழக்கி ஸ்தான் எனும் பெயருடன் அவர்களது தாக்குதல் திட்டம் அமைந்துள்ளது. இதன் பின்னணியில் பல அரசியல்வாதிகளும் பெரிய புள்ளிகளும் தொடர்புபட்டுள்ளனர். நாட்டில் தமது அரசியலைத் தக்கவைத்துக்கொள்ளவே மதவாத சில அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

தகுதி தரம் பாராது சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகளைக் கைது செய்து விசாரணை நடத்தவேண்டும். இல்லையேல் இந்த நாடு இன்னும் பல பேரழிவுகளைச் சந்திக்கும் என்றார். (த)

### தூதுவர் கொலை முயற்சி வழக்கில்

# எதிரியின் ஒப்புதல் வாக்கு மேல்நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு, மே 3

பாகிஸ்தான் தூதுவர் கொலைமுயற்சி வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட ஆதித்தனுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கில் முக்கிய சான்றாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச தரப்புச் சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாதென்று மேல் நீதிமன்று தெரிவித்துள்ளது.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் அரச தரப்பால் முன்வைக்காத நிலையில் எதிரியை விடுதலை செய்யும்படி அரசதலைவர் சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் தனது வா தத்தை முன்வைத்துள்ளார்.

பாகிஸ்தான் தூதவர் பஷார் அலி மொகமட் என்பவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி 2006ஆம் ஒகஸ்ட் மாதம் 14 ஆந் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுவப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஏழு இராணுவ அதிகாரிகளுக்கு இறப்பை ஏற்படுத்தியதுடன், மேலும் பத்து பொதுமக்களுக்கு காயத்தை ஏற்படுத்தினார் என்று அவருக்கு எதிராகக் குற்றம்சாட்டப்பட்டு ஆதித்தன் மற்றும் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

3 ஆம் எதிரியான ஆதித்தன் சார்பில் அரசதலைவர் சட்டத்தரணி கே.வி தவராசா வாதாடினார். கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக ஒரேயொரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபர் யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கும், கொழும்பு மேல் நீதிமன்றுக்கு இரு வழக்குகளுமாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்திருந்தார். முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச, இராணுத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார் என்று குற்றஞ்சாட் டப்பட்டிருந்தது. இரு வழக்குகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்றாவது வழக்கிலும், எதிரி சுயவிருப்பு டன் வழங்கினார் என்று கூறி சமர்ப்பிக்கப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுயமாகப் பெறப்பட்டதா? என்பதற்கான உண்மை விளம்பல் விசாரணையில் சுயமாக எதிரியினால் வழங்கப்படவில்லையென்பதை அவதானிப்பதாகக் கூறிய நீதிமன்று நேற்றுமுன்தினம் அதை நிராகரித்தது. 10 ஆண்டுகளாக நடைபெறுகின்ற இந்த வழக்கில் வேறு எந்தவிதமான சான்றுகளும் அரச தரப்பால் எதிரிக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை. மேலதிக விசாரணைக்காக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டி ஆராச்சி ஜூன் 26ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தலையாழியில் நேற்று பெரும் சுற்றிவளைப்பு

*யாழ்ப்பாணம், மே 3*
*யாழ்ப்பாணம் தலையாழிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 4 மணியில் இருந்து பெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.*



இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸ், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.
இந்தச் சுற்றிவளைப்பில் குறித்த பகுதிக்குள் உள்நுழையும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டதோடு, குடியிருப்பாளர்கள் எவரும் வெளிச்செல்லவோ அல்லது வீட்டை விட்டு வீதியில் இறங்கவோ இராணுவத்தினரால் அனுமதிக்கப்படவில்லை.
ஒவ்வொரு வீடுவீடாக நுழைந்து வீட்டில் இருப்பவர்கள் தொடர்பில் பதிவுகள் இடம்பெற்றதோடு வீடுகளும் பொலிஸாரால் சோதனை செய்யப்பட்டன. அவ்வாறு சோதனைக்குட்படுத்தபட்ட வீடுகள் இராணுவத்தினரால் சிறிய சுவரொட்டி ஒட்டப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டன.
உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து நாடு முழுவதும் முப்படைகளும் களம் இறக்கப்பட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. (ஐ-ரி 1)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 3
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஒரு மாத காலத்துக்கு வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில்
பொலிகண்டி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, நவிண்டில், நெடியகாடு, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம் ஆகிய இடங்களிலும்,
கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர்,மஸ் அற்றிவிட், யுனிச்செலா, விவசாயப் பீடம், பொறியியல் பீடம், பன்னை வீடு, கார்கில்ஸ் ஆர்கோ கோட்டைகட்டியகுளம்,அக்கராயன் குளம், அமைதிபுரம், கொமாண்டோ இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் முருங்கன்பிட்டியிலிருந்து நறுவிலிக்குளம் வரை, செம்மண்தீவு வேர் கவுஸ், டொன்பொஸ்கோ ஆகிய பிரதே சங்களிலும்,மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பெற்றோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே 3
கோண்டாவில் கிழக்கு குட்டிசுட்டி முன்பள்ளி அக குழந்தைகள் பகல் நேர காப்பக மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் முன்பள்ளி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.
அனைத்துப் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுகொண்டுள்ளனர். (ஐ)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,மே 3
முச்சக்கரவண்டியும் மகிழுந்தும் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதியும் பயணியும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் மீசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
மீசாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினம் சுரேஸ் ( வயது - 43 ), மீசாலை புத்தூர் சந்தியைச் சேர்ந்த பொன்னுத்துரை சபேசன் (வயது- 42 ) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.
இந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.
இதேவேளை உந்துருளியில் பயணித்த மூதாட்டியின் சேலை சில்லுக்குள் அகப்பட்டு வீழ்ந்து காயமடைந்து விபத்துக்குள்ளானார்.
இந்த விபத்து கைதடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் இடம் பெற்றது.
மட்டுவில் மேற்கைச் சேர்ந்த கந்தசாமி தங்கமணி (வயது- 65) என்ற மூதாட்டியே காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9,131)

## சுவிஸ்க்குப் பயணமானது கவியரங்க அணி

யாழ்ப்பாணம்,மே 3
உலக அரங்கில் கவியரங்க நிகழ்வை நகர்த்திய முதல் அரங்க அணிக் கவிஞர்களான கு .வீரா, வேலணையூர் சுரேஷ், வெற்றி துஷ்யந்தன் இராஜேஷ்வரன் கோகுலன், புதுவைஅன்பன், பஷீனா உள்ளிட்டோர் சுவிஸ்க்குப் பயணமாகியுள்ளனர்.
சுவிஸ் சூரிச்சில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள பிரமாண்டமான நிகழ்வுக்காகச் சென்றுள்ளனர்.
சுவிஸ் சூரிச் சிவன் ஆலய சைவத்தமிழ்ச் சங்கத்தின் 25ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு அன்பே சிவம், அற்றார் பசி தீர்க்கும் நிகழ்வின் தாயக உணவுக் கண்காட்சி எனப் புலம்பெயர்ந்த உறவுகள் மத்தியில் கவியரங்க நிகழ்வுக்காக இவர்கள் சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அந்தோனியார் தேவாலய முகப்புத் திறப்பு நிகழ்வு

மருதங்கேணி, மே 3
பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மணல்காடு புனித அந்தோனியார் தேவாலய முகப்பு திறப்பும், உறுதி பூசுதல் நிகழ்வும் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் ஞான பிரகாசம் ஆண்டகை தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றது.
இந்த நிகழ்வுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸார், இராணுவம், சிறப்பு அதிரடிப் படை ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர்.
ஆலய வளாகம் முழுமையாகச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் மோப்ப நாய் உதவியுடனும் தேடுதல்கள் நடத்தப்பட்டன.
தேவாலயத்துக்கு மக்கள் வரும் இரு வழிகளிலும் சோதனைச் சாவடி அமைத்து அனைவரும் கடுமையான உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தேவாலயத்துக்கு உள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் ஞான பிரகாசம் ஆண்டகை மற்றும் அருட்தந்தையர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு முகப்பு திறக்கப்பட்டதுடன் உறுதி பூசுதல் வழிபாடுகளும் இடம்பெற்றன.
நிகழ்வில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். பாதுகாப்பு நடவடிக்கைக்காக நூற்றுக் கணக்கான பொலிஸ், இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ஐ-160)



## ஈருருளி கையளிப்பு

மருதங்கேணி,மே 3
பொலிகண்டியைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய ஒருவருக்கு ஜனநாயக போராளிகள் கட்சியால் ஈருருளி ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.
ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் ஆகியோர் அவரது இல்லத்துக்குச் சென்று இந்த உதவியை வழக்கினர். (ஐ-160)

## நிர்வாகிகள் தெரிவு

ஏழாலை,மே 3
தெல்லிப்பழை பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் தெரிவாகினர்.
தலைவராக த.மை.செல்வராசா, செயலராக பொ. கணேஸ்வரலிங்கம், பொருளாளராக வ.மார்க்கண்டு, உபதலைவராக சு.தளையசிங்கம், உபசெயலராக மா.வரராசசிங்கம் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களாக மு.நாராயணர், கு.ரஜனி கணக்குப் பரிசோதகராக த.சிவயோகியும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## மக்கள் குறைகேள் சந்திப்பு

சாவகச்சேரி, மே 3
சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி லலிதாராணி ரவீந்திரன் மக்கள் குறைகேள் சந்திப்பை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளார்.
முதலாவது மக்கள் குறைகேள் சந்திப்பு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும்.
நகரசபையின் அனைத்து வட்டார வரியிறுப்பாளர்களும் தமது நகரசபையுடன் தொடர்பான பிரச்சினைகளைத் தெரிவித்து தீர்வு காணுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சபைக் கூட்டத்தின்போது கலாசார உடை அவசியம்

### வலி.தென்மேற்கு சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

வலி.தென்மேற்கு, மே 3
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்களில் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் கலாசார உடையில் பங்குபற்றவேண்டும் என்ற தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலாசார உடை அணிவது சம்பந்தமாக உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல் கருத்துத் தெரிவிக்கும் போது:
வருங்காலச் சந்ததியினரின் நலனைக் கருத்தில் கொண்டு கலை, கலாசாரங்களை அழியவிடாமல் பாதுகாப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை வரவேற்கத்தக்க விடயமாகும். அதேநேரத்தில் பிரதேச சபை ஒரு மதிப்புமிக்க சபை. இதற்கேற்ற வகையில் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது கலாசார உடையை அணிவது சிறந்ததாகும் என்று தெரிவித்தார்.
இவரின் கருத்துக்குச் சபை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தமையைத் தொடர்ந்து இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஐ-115)

## அரச மொழிபெயர்ப்பாளராகப் பதவியேற்பு

புலோலி,மே 3
புலோலி வட கிழக்கு வராத்துப்பளையைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜெகதீஸ்வரன் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ், ஆங்கிலம் மொழிப்பெயர்ப்பாளர்களாக நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் அண்மையில் பதவியேற்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொல்லப்பட்டவர்களுக்கு ஆயர் இல்லத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே 3

உயிர்த்த ஞாயிறு அன்று குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஆயர் இல்லத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதன்மைச் சுடரை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து,யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் மற்றும் பங்குத்தந்தையர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. (ஐ)



## இந்து ஆலயங்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்துக

*வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு*

மருதங்கேணி, மே 3

நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக இந்து அலயங்களும் உரிய கவனம் எடுக்க வேண்டும் என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது.

வடமராட்சி கிழக்கின் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதில் வடமராட்சி கிழக்கு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக அரசு அனுப்பிய சுற்று நிருபம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இதன் போதே வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மருதங்கேணி பிரதேச மருத்துவ மனை, அம்பன் பிரதேச மருத்துவபமனை என்பவற்றில் நிரந்தரமாக மருத்துவர்கள் இல்லாமையும் மருதங்கேணி மருத்துவ மனைக்கு நான்கு மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் ஒரு மருத்துவர் மட்டுமே கடமையில் உள்ளதாகவும், இரண்டு நோயாளர் காவு வண்டி இருக்க வேண்டிய நிலையில் ஒரு நோயாளர் காவு வண்டி மட்டுமே வழங்கப் பட்டுள்ளதாகவும் நிச்சிய வெட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒழுங்கான மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதில்லை என்றும் அங்கு கடமையில் இருக்க வேண்டிய மருந்தாளர் வேறு ஒரு மருத்துமனையில் பணியாற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியும் மருதங்கேணி பதில் சுகாதார மருத்துவ அதிகாரியுமான செந்தூரன், குறித்த நியமனங்கள் செய்யும்அதிகாரம் மாகாண சுகாதார திணைக்களத்துக்கே உண்டு என்றும் அதற்கு என்னால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

இதற்கு மக்கள் மாகாண சுகாதார திணைக்களத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தற்போதைய நாட்டு நிலமையில் வடமராட்சி கிழக்கில் ஒரு இடர் ஏற்பட்டால் இங்குள்ள மருத்துவமனைகளின் நிலையில் உரிய சேவைகளை வழங்க முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி செந்தூரன் மற்றும் சுகாதார பரிசோதகர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.சுரேஸ்குமார்,சி.பிரசாத்,வே.பிரசாந்தன், திருமதி வி.றஜிதா, திருமதி கலாவதி ஆகியோரும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மருதங்கேணி கோட்ட கல்வி அதிகாரி ச.திரவியராசா மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-160)

# பாடசாலை நிகழ்வுகளை நிறுத்தி பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

## *மாகாணக் கல்வி அமைச்சு அறிவுறுத்தல்*

கொடிகாமம், மே 3

பாதுகாப்பு தொடர்பாக பாடசாலைகளில் நடத்தப்பட்டுவரும் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்களில் மாகாண கல்வி அமைச்சின் செயலரால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுவருகிறது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பாடசாலைகளில் இயங்கும் இடர் முகாமைத்துவ அலகினை மீண்டும் செயற்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான முற்காப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சகல பாடசாலைகளிலும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள், பொலிஸ் அலுவலர்களை உள்ளடக்கிய பாடசாலை மட்ட விழிப்புக்குழு ஒன்றினை உடனடியாக அமைத்தல் வேண்டும்.

இந்த குழுவினது கூட்டங்கள் மாதாந்தம் இரு தடவை இடம் பெறுவதுடன் அக்கூட்ட குறிப்புக்கள் பாடசாலையில் பேணப்படுவதுடன் அதன் பிரதி உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் காலையில் பெற்றோர் ஆசிரியர்கள்கொண்ட குழுவினர் தினமும் பாடசாலை வளாகம், வகுப்பறைகள், மைதானம், சிற்றுண்டிச் சாலை பாடசாலை நூலகம் போன்றவற்றை பரிசோதனை செய்ய வேண்டும். சந்தேகத்துக்கிடமான பொருள்கள் அல்லது பொதிகள் உள்ளனவா என்பதை பரிசோதித்து கண்காணிப்பை உறுதிப்படுத்த வேண்டும் .

பாடசாலை மாணவர்கள் வருகின்ற போது முதன்மை வாயிலில் ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோர் உள்வரும் மாணவர்களை தங்கள் பாடசாலை மாணவர்கள் தான் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பாடசாலையில் உள்நுழைய அனுமதிக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் பாடசாலை வளாகத்தினுள் முன் அனுமதியின்றி அல்லது அவசிய காரணமின்றி எதுவித வாகனங்களையும் உட்செல்ல அனுமதிக்கப்படக்கூடாது.

நாளாந்தம் பாடசாலை ஆரம்பித்த பின்னர் பாடசாலையின் வாயிற்கதவினை பூட்டி வைக்க வேண்டும்.

தெரியாத நபர்களை பாடசாலை வளாகத்தில் உள்நுழைய அனுமதிக்க கூடாது அடையாளப்படுத்திய பின்னர் அதிபரிடம் தொடர்பு கொண்டுஉள்நுழையஅனுமதிக்க வேண்டும்.

பாடசாலையின் பொது நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்கள் விளையாட்டு போட்டிகள் மற்றும் சுற்றுலா நிகழ்வுகளை தற்காலிகமாக இடை நிறுத்த வேண்டும்.

பாடசாலை அதிபர்கள், பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ கடற்படை தொடர்பு அலுவலர்கள் மற்றும் பொலிஸ் தொடர்பு அலுவலகர்கள் ஆகியோரின் அலைபேசி மற்றும் அலுவலக தொலைபேசி இலக்கங்களை பெற்று வைத்திருக்க வேண்டும். பாடசாலையில் கட்டட நிர்மான வேலைகள் நடைபெறும் இடங்களில் சிறப்புக் கண்காணிப்பு இருக்க வேண்டும்.

மாணவர்கள் தொகை அதிகமாகவுள்ள பாடசாலைகளைச் சுற்றி மறைகாணிகளை(சிசிரிவி) வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையான அனுமதியுடன் பாடசாலை அபிவிருத்தி சங்க நிதியிலிருந்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இயங்கு நிலையில் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆயிரம் பிள்ளைகளுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர்கள் தேவைக்கேற்ப அப்பிரதேச பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பொலிஸ் அலுவலர்களின் பாதுகாப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

சகல பாடசாலை அதிபர்களும் தங்கள் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோரின் அலைபேசி இலக்கங்கள், பெயர் விவரங்கள் என்பவற்றுடன் அவற்றில் வருகை தரும் மாணவர்களின் பெயர் விவரங்களையும் பெற்று தம்வசம் வைத்திருக்கவேண்டும். பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் சேவையின் போது மாணவர்களை மட்டும் அழைத்து வருவதினை உரிய சாரதிகள் நடத்துநர்கள்உறுதிப்படுத்தவேண்டும்.

மாணவர்களின் காலைப் பிரார்த்தனை வகுப்பு ரீதியாக ஒழுங்கு படுத்துவதுடன் மாணவர்களுக்கான விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை வகுப்பாசிரியர்கள் மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்வேண்டும்.

சந்தேகத்துக்கு இடமான நபர்களை மற்றும் பொருள்களை கண்டால் அது பற்றி வகுப்பாசிரியர் அதிபர் மற்றும் மாணவ தலைவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். என்றுள்ளது. (ஐ-159)

## அப்பாவிகள் மீதான தாக்குதல் பெரும் அதிர்ச்சியளிக்கின்றது

*யாழ்.கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கவலை*

யாழ்ப்பாணம், மே 3

ஈஸ்டர் ஞாயிறு அன்று இலங்கை நாட்டில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அதன் பின்னரான நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்பில் யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகளிலும் ஈஸ்டர் ஞாயிறன்று அப்பாவி மக்கள், குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை நடத்தியமை குறித்து நாங்கள் மிகவும் அதிர்ச்சியுற்றோம். வேதனைப்படுகின்றோம்.

சம்பவத்தில் உயிரிழந்த 250க்கு மேற்பட்ட நபர்களின் ஆன்மா கடவுளின் சந்நிதியில் நித்திய மகிழ்ச்சிக்குள் இருப்பார்கள் என்று நம்புகின்ற அதே வேளை அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

காயமடைந்த அனைவருக்கும் உரிய சிகிச்சைகள் கிடைக்கப்பெற்று விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்த நேரத்தில் இலங்கைவாழ் மக்கள் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், பொறுமை மற்றும் புரிதலுடன் செயல்பட வேண்டும். சமாதானத்தை உறுதி செய்வதில் அனைவரும் பாதுகாப்பு மற்றும் அவசர சேவைகளுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்க வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தக் குழப்ப நிலைகள் வெகுவிரைவில் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் எனவும் நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் எனவும் யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## ஈஸ்ரர் தாக்குதல் சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாதது

*கிளி. சர்வ மதப் பேரவை தெரிவிப்பு*

கிளிநொச்சி, மே 3

இலங்கை ஒரு பல்லின சமூகம் வாழ்கின்ற நாடு. கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்த சமயங்களும் மனித படுகொலையை போதிக்கவில்லை. இவ்வாறு கிளிநொச்சி சர்வமதக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கருணா நிலையத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் நாம் மதங்களுக்கு அப்பால் மனிதர்களாக ஒற்றுமையாக வாழ விரும்புகின்றோம், வாழ்ந்து வருகின்றோம். அந்தச் சூழல் பாதிக்கப்படக் கூடாது. கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களை தொடர்ந்து கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டவர்கள் சந்தேகத்தின் பெயரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தக் குடும்பங்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதலைக் கொடுப்பது எங்களது பொறுப்பாகும்.

பாதுகாப்புக் கருதி நடத்தப்படும் சோதனை நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும். ஆனால் மனித மாண்பை பாதிக்கின்ற வகையில் சோதனைகள் இடம்பெறுவதனை தவிர்க்க வேண்டும். ஒற்றுமைக்குத் தடையாக உள்ளவைகளை அகற்ற வேண்டும். அடிமட்ட மக்கள் மத்தியில் சமய நல்லுறவை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நல்லிணக்கம், புரிந்துணர்வு ஐக்கியம் நோக்கி பயணிக்க வேண்டும் - என்றனர். (எ- 214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வவுனியா, கோயில்குளத்தில் நேற்றுத் திடீர் சுற்றிவளைப்பு

## இராணுவச் சீருடை, வயர் மீட்பு ஒருவர் விசாரணை வளையத்தில்

*வவுனியா, மே 3*

வவுனியா, கோயில்குளம் பிரதேசத்தில் நேற்று இராணுவத்தினரும், பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சுற்றிவளைப்பின்போது ஒருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்றுக் காலை திடீரென அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த பாதுகாப்புத் தரப்பினர் அங்குள்ள வீடுகள் அனைத்தையும் சோதனையிட்டனர். அந்தப் பகுதியால் பயணித்த வாகனங்கள் வழிமறிக்கப்பட்டுத் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சோதனை நடவடிக்கையின்போது கோயில்குளத்தைச் சேர்ந்த ஒருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து இராணுவச் சீருடையை ஒத்த சீருடை, உயர் வலு மின்சார வயர், கையுறை, காலணி போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் அண்மையில் மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஈஸ்ரர் தினத்தன்று நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை அடுத்து நாடு முழுவதும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வவுனியாவில் கடந்த சில நாள்களாக முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நேற்று தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் கோயில்குளம், கோயில்புதுக்குளம் ஆகிய இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-110)

# சோதனைச் சாவடிகள் அமைத்து வவுனியாவில் கடும் சோதனை




வவுனியா, மே 3

வவுனியா இறம்பைக்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை இராணுவத்தினரின் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் என்பன அமைந்துள்ள ஹொரவப்பொத்தான வீதியில் இந்தச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் கடும் சோனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன் தேடப்படும் வாகனங்களின் இலக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஈஸ்ரர் தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, வவுனியாவில் 31 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுச் சோதனைகள் நடத்தப்படுகின்றன என்றும், கடந்தவாரம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளில் 24 பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், 4 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ-110)

# பொதுமக்களால் ஒருவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

முல்லைத்தீவு, மே 3

முல்லைத்தீவு, முத்துஐயன் கட்டுப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினார் என்று தெரிவித்து ஒருவர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

முத்துஐயன்கட்டு வலது கரைப் பாடசாலைக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஒருவர் நடமாடியுள்ளார்.

அவர் மீது சந்தேகம் கொண்ட பொதுமக்கள் அவரைப் பிடித்து ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பின்னர் அவரை விடுவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3)



# மன்னாரின் பாதுகாப்பு நிலமை தொடர்பாக நேற்று ஆலோசனை

மன்னார், மே 3

நாட்டில் தற்போதுள்ள நிலமையைக் கருத்தில் கொண்டு மன்னார் மாவட்டத்தின் பாதுகாப்புத் தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆராயப்பட்டுள்ளது.

நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் சீ.மோகன்ராஜ் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் பண்டார, மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரிஸ், கடற்படை அதிகாரிகள், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர், பௌத்த மதகுரு விமலரத்தின தேரா, இந்து குருமார்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் எடுக்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள், மருத்துவமனைகள் ஆலயங்கள் என்பற்றின் பாதுகாப்பு நிலமை என்பன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மன்னார் மாவட்டத்தில் பிரச்சினைகள் தலைதூக்காத வகையில் பாதுகாப்புத் தரப்பினருக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அவசியம் தொடர்பாகவும் கூட்டத்தில் பேசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-60)

# குப்பையகற்றும் வாகனத்துள் கல் உடைக்கும் வெடி மருந்து

வவுனியா, மே 3

வவுனியா நகர சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குப்பை அகற்றும் வாகனத்தில் இருந்து கல் உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வெடிமருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா நகர சபை வளாகத்தில் குப்பை அகற்றும் வாகனம் ஒன்று பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதை நேற்று நகர சபை உறுப்பினர்கள் திருத்துவதற்காகச் சுத்தப்படுத்தியுள்ளனர்.

அப்போது அதனுள் சிறு அளவிலான வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று தேசிய அடையாள அட்டைகளும் காணப்பட்டுள்ளன.

அதையடுத்து நகர சபை அலுவலர்கள் வவுனியா பொலிஸாருக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வெடி மருந்தையும், அடையாள அட்டைகளையும் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (எ-110)

# தாக்குதலில் இறந்தோருக்காக மன்னாரில் இறைவேண்டுதல்

மன்னார், மே 3

மன்னார் மாவட்ட நல்லிணக்கக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கடந்த ஈஸ்ரர் தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்காகவும், காயமடைந்தவர்களுக்காகவும் அதில் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் சீ.மோகன்ராஸ் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் தேசிய நல்லிணக்க குழுவின் நிறைவேற்றுப் இணைப்பாளர் ஜொகான் பெரேரா, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மூர்வீதி பெரிய பள்ளி வாசல் மௌலவி எஸ். ஏ.அசீம், இந்து மதத்தைச் சார்ந்த தர்மகுமாரக் குருக்கள், கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த [illegible] கூஞ்ஞ, மன்னார் மறை[illegible] முதல்வர் அருட்பணி. ஏ.விக்ரர் சோசை அடிகளார், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரீஸ் உட்பட நகர, பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் குண்டு வெடிப்பில் உயிரிழந்த, காயமடைந்தவர்களுக்காக நான்கு மதத் தலை[illegible] பிரார்த்தனை நடத்தப்பட்டது. (எ-60)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனத்தை எழுச்சியடையச் செய்ய கலாசாரத்தைக் காக்கவேண்டும்

## வலி.தென்மேற்குப் பிரதேச சபைக் கலாசாரக் குழுத் தலைவர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, மே 3

கலாசாரத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் ஓர் இனத்தை எழுச்சி செய்யமுடியும். எமது கலாசாரம் பாரம்பரியமானது. அடுத்துவரும் சந்ததியினருக்கு எடுத்துக் காட்டும் வகையில் கலாசாரத்தை ஆவணமாக்கும் பொருட்டு மாபெரும் கலாசார நிகழ்வு ஒன்றை முன்னெடுக்க வேண்டும். இது முழுமையாக மக்களின் பங்களிப்புடனானதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைக் கலாசாரக் குழுத் தலைவர் கே.ஜெசீலன் தெரிவித்தார்.

பிரதேச சபையில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலாசாரக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஏனைய அலுவலகங்கள் முன்னெடுப்பது போன்று வெறும் அலுவலக நடவடிக்கையாக இல்லாமல் 2,3 தினங்கள் அல்லது ஒரு வாரம் கலாசார வாரமாக முன்னெடுக்கப்பட்டு இறுதி நிகழ்வு மதிப்புறுத்தும் நிகழ்வாக அமைய வேண்டும்.

கலாசார வாரத்தில் முன்னெடுக்கப்படும் விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டு ஒரு கலாசார மடல் வெளியிடப்பட வேண்டும்" - என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தவிசாளர்,

"பழைமை வாய்ந்த எமது கலைகள் மற்றும் பொருள்கள் நிகழ்வில் காட்சிப்படுத்த வேண்டும்.

பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் கண்காட்சியை நடத்துவதுடன் அவற்றுக்கான ஆவணங்களையும் சேகரிப்போம்" என்று தெரிவித்தார்.

செயலர் கருத்துத் தெரிவிக்கும் போது கூறியதாவது:

"எமது பகுதியில் பாரம்பரியங்கள் மற்றும் கலை நயம் கொண்ட பொருள்களை ஆவணப்படுத்திக் காட்சிப்படுத்துவது சிறந்தது.

இதற்கென ஓர் இடம் தேவை. பழைமையான நாச்சார் வீடு ஒன்று எமது பகுதியில் இருக்குமாயின் அதனை இதற்கெனப் பயன்படுத்துவது சிறந்ததாக அமையும். அவ்வாறு சாதகமான இடங்கள் இருந்தால் அதனைப் புராதன சின்னமாகக் கொண்டு அதன் புராதனம் அற்றுப் போகாத வண்ணம் சீரமைத்து அதனில் புராதனப் பொருள்களை நிரந்தரமாகக் காட்சிப்படுத்தி வைத்தல் சிறப்பாக அமையும். இதனை ஒரு சுற்றுலாத் தளமாக மாற்றி அமைக்கலாம்.

உள்ளூராட்சி அமைச்சின் சுற்றுலாத்துறையினூடாக இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் மூலம் எமது கலை பாரம்பரியம் பேணப்படுவதோடு இதிலிருந்து வருமானம் ஈட்டக் கூடியதாகவும் இருக்கும்" எனத் தெரிவித்தார். (ஐ-115)





## மூக்குக்கண்ணாடி வழங்கலும் குருதிக் கொடை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,மே 3

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கமும், காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய மூக்குக்கண்ணாடி வழங்கலும் குருதிக் கொடை நிகழ்வும் அண்மையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள கழக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மருத்துவ அதிகாரி பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். நாட்டில் இடம்பெற்ற குண்டு தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது. நிகழ்வில் கழக உறுப்பினர்கள், சமாதான நீதிவான்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)

## உறுப்புரிமை அட்டையை பெறமுடியும்

அச்சுவேலி,மே 3

கோப்பாய் பிரதேச ஓய்வூதியர் சகாய நிதிச் சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களது உறுப்புரிமை அங்கத்துவ அட்டையை வாராந்தம் புதன்கிழமைகளில் வலி. கிழக்குப் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தலைவர் சி.அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.

சங்க உறுப்பினராக இணைந்து கொள்ளாதவர்கள் உறுப்புரிமைக்கான விண்ணப் படிவங்களையும் மேற்குறிப்பிட்ட நாளில் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பில் சங்கத் தலைவர் தெரிவிக்கையில், "2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற அனைவரும் ஓய்வூதிய சகாய நிதிச் சங்கத்தில் உறுப்பினராக இணைக்கப்பட்டு அதற்கான மாதாந்தச் சந்தாப் பணம் 50 ரூபா ஓய்வூதியத்தில் இருந்து கழிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய படிவத்தைப் பூரணப்படுத்தி உறுப்புரிமை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-11)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மே 3

தெல்லிப்பழை சிறி சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 18ஆம் திகதி சனிக்கிழமை 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன என்று ஆலயப் பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## வட. கிழக்கு மருத்துவமனைக்கு சென்று சத்தியமூர்த்தி ஆராய்வு

மருதங்கேணி, மே 3

வடமராட்சி கிழக்கு மருத்துவமனைகளுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி நேற்றுமுன்தினம் நேரில் சென்று மருத்துவ மனைகளின் நிலமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.



நிச்சியவெட்டை கேவில் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம், மருதங்கேணி பிரதேச மருத்துவ மனை, அம்பன் பிரதேச மருத்துவ மனை ஆகியவற்றுக்குப் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது மருத்துவர் சத்தியமூர்த்தி மூன்று மருத்துவமனைகளிலும் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளையும் உடனடியாகத் தீர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மருத்துவமனைகளின் பொறுப்பு மருத்துவ அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இதே வேளை, மருதங்கேணி கிராமிய மருத்துவமனை, நிச்சியவெடவடை ஆரம்ப சுகாதார நிலையம், அம்பன் கிராமிய மருத்துவமனை ஆகியவற்றின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறை மற்றும் ஆளணி மருத்துவர், விடுதிகள் போன்றவை தொடர்பிலும் பேசப்பட்டது.

இந்த நிலையில் இந்தப் பயணத்தின்போது யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இவை அனைத்துக்கும் உடனடியாகத் தீர்வு காண்பதாகவும் ஆழியவளைக் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பித்துத் தருவதாகவும் உறுதியளித்ததாக மருதங்கேணிப் பிரதேச மருத்துவமனை அபிவிருத்திச் சபை பொருளாளரும் பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினருமான வேலுப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார். (ஐ-160)

## புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,மே 3

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன.

வணணணங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர் மற்றும் பெரியோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-23)



## அஞ்சலியும், குருதிக்கொடை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,மே 3

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் குண்டு வெடிப்பில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி மற்றும் குருதிக்கொடை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

இளவாலை பிரதேச மருத்துவ மனையில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து உயிர்காக்கும் உன்னதப் பணியில் இணைய அழைப்பு விடுப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-21)

## ஓ/எல் பரீட்சை விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 3

2019ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பங்களை காலதாமதமின்றிப் பரீட்சார்த்திகள் அனுப்பி வைக்க வேண்டும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள் ளது.

2019ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ள நிலையில் விண்ணப் முடிவுத் திகதி எதிர்வரும் 24ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னரே பரீட்சாத்திகளின் விண்ணப் பங்கள் கிடைக்க கூடியவாறு சரியான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். டிசெம்பர் மாதம் நடைபெறும் இந்தப் பரீட்சைகள் நாடு முழுவதும் 904 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளது என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. (எ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் "உன்னை வெல் உலகை வெல் " எனும் தலைப்பில் இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை சின்மயா மிஷன் வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது இதில் ஆன்மிக சிந்தனைகள், குழுச் செயற்பாடுகள், விழுமிய விளையாட்டுக்கள், வேதகால இலகு கணித கணிப்பீடு, படக்காட்சி போற்றவற்றின் ஊடாக பயிற்சி பட்டறை இடம்பெற்றது.
இதில் பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட விரிவுரையாளர் காங்கேயன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (ஜ)

## அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இடர் சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.
எனவே பாடசாலை மாணவர்களின் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் மு.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஜ-7)


## பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் பாடசாலை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் திருமதி எம்.விமலநாதன் அறிவித்துள்ளார். (ஜ)

# தூக்கி எறியப்படும் தகரங்களால் முல்லை. சந்தைக்கு செல்ல அச்சம்

முல்லைத்தீவு, மே 3

தற்போது வீசி வரும் கடும் காற்றால் முல்லைத்தீவு சந்தைக் கட்டடத்தில் உள்ள தகரங்கள் தூக்கி வீசப்படுகின்றன. அதனால் அங்கு செல்ல அச்சமாக இருக்கின்றது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.



சந்தையின் ஒரு பக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த தகரம் காற்றினால் தூக்கியெறி யப்பட்டு தொங்கிய நிலையில் காணப்படுகின்றது. கடும் காற்றால் தகரங்கள் பெரும் சத்தம் எழுப்புகின்றன. மரக்கறி விற்கும் பகுதியில் இருந்து கடலுணவுக்கும் பகுதிக்குச் செல்வதற்கு அச்சமாக இருக்கின்றது. தகரங்கள் எப்போது வேண்டுமானாலும் கழன்று பறக்கும் நிலையில் உள்ளன. அவற்றால் மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்று மக்கள் கூறுகின்றனர்.
இது தொடர்பாக முல்லைத்தீவு பிரதேச சபைக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டபோதும் அவை சீர் செய்யப்படவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீடு தமக்குக் கிடைக்கவில்லை என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர் என்று சந்தை வியாபாரிகள் கூறுகின்றனர்.
மக்களுக்கும், சந்தை வியாபாரிகளுக்கும் உள்ள ஆபத்தைக் கருத்தில் கொண்டு அவற்றை விரைவாகச் சீர் செய்து தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-ரி3)

# தொழிலாளர் தினத்தில் தொழிலாளிக்கு உதவி

வவுனியா.மே 3
வவுனியாவில் உலகத் தொழிலாளர்கள் தினத்தில் 12வருடங்களாக வீதி ஓரத்தில் மர நிழலில் சைக்கிள் திருத்தும் தொழிலாளிக்கு தகரத்திலான கடை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.
வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பால் இந்தக் கடை அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் தொழிலாளர் தினத்தில் வழங்கப்பட்டது.
வவுனியா வைரவப்புளியங்குளத்தில் கடந்த 12வருடகாலமாக வீதி ஓரத்தில் மர நிழலில் ஈருருளி திருத்தும் தொழிலினை மேற்கொண்டு வரும் கூமாங்குளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.
புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் பகீரதனின் நிதிப்பங்களிப்பில் இந்த கடை அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ)





## பிளாஸ்டிக், கண்ணாடி பொருள்கள் கிளி. இராணுவத்தினரால் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 3
பொதுமக்களின் வருமானத்தை ஊக்குவிக்கும் வகையிலும், சுற்றுச் சூழல் தூய்மையைப் பேணும் வகையிலும் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடிப் பொருள்கள் கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கும் 65 ஆவது படைபிரிவினால் கொள்வனவு செய்யப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக இராணுவ ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பிரதேச வாசிகளிடமிருந்து காட்போட் ஒரு கிலோ 10 ரூபாவுக்கும், பிளாஸ்டிக் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும், குடிதண்ணீர் போத்தல்கள் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும், பிளாஸ்டிக் போத்தல்கள் ஒரு கிலோ 10 ரூபாவுக்கும், ரின்கள் ஒரு கிலோ 6 ரூபாவுக்கும், வெள்ளை கண்ணாடித் துண்டுகள் ஒரு கிலோ 5 ரூபாவுக்கும், பிரவுண் கண்ணாடித் துண்டுகள் ஒருகிலோ 2 ரூபாவுக்கும், பச்சைக் கண்ணாடி துண்டுகள் ஒரு கிலோ ஒரு ரூபாவுக்கும், ஜோக்கட் பிளாஸ்டிக் கப்புக்கள் ஒரு கிலோ 2 ரூபாவுக்கும் இராணுவ சேகரிப்பு நிலையங்களில் கொள்வனவு செய்யப்படும்.
வெளிச் சந்தைகளில் 65 % விற்பனையாகும் இந்தப் பொருள்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுப் பின்னர் இராணுவத்தினரால் இவை தரம் பிரிக்கப்பட்டு மாற்றுப் பொருள்கள் உற்பத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதில் வரும் இலாபம் பாடசாலை மாணவர்களுக்கு உதவும் திட்டங்களுக்காக இராணுவத்தினரால் பயன்படுத்தப் படுத்தப்படவுள்ளன.
இவை 65 ஆவது படைப் பிரிவின் கீழுள்ள படைத் தலைமையகங்கள், இராணுவ பயிற்சி பாடசாலைகளில் சேகரிக்கப்படுகிறன- என்றுள்ளது. (எ-7)

## வடமராட்சி கடற்பரப்பிலும் தீவிர சோதனை

வடமராட்சி.மே 3
நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து வடமராட்சிக் கடற்பரப்பிலும் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.
அண்மைய நாள்களாக வடமராட்சிக் கிழக்கு கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைக்காக கடலுக்குச் செல்கின்ற நேரம் கடலில் வைத்து அவர்களின் படகு இயந்திரம் மற்றும் தொழில் உபகரனங்களும் சோதனையிடப்பட்டு வருவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
மேலும் சோதனையின் போது படகு பதிவுப் புத்தகம் படகின் காப்புறுதி தொழிலுக்கு செல்லும் தொழிலாளர்களின் ஆள் அடையாள அட்டை என்பவற்றையும் கடற்படையினர் கோரி வருகின்றனர்.
எனவே இனி கடலுக்கு தொழில் நிமித்தம் தொழிலாளர்கள் செல்லும்போது இந்த ஆவணங்களைக் கொண்டு செல்வதன் மூலம் தொழிலின் போது ஏற்படும் சிரமத்தைக் குறைக்க முடியும் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஜ-70)

# வவுனியாவில் வாள் மீட்பு

வவுனியா.மே 3
வவுனியா தோணிக்கல் பகுதியில் வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது அது மீட்கப்பட்டது.
வவுனியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து சிறப்புச் சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர்.
அந்தவகையில் வவுனியா, தோணிக்கல், ஆலடிப் பகுதியில் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. எவரும் கைது செய்யப்படவில்லை என்று மேலும் தெரிவித்தனர். (த-110)



## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டாரென ஒருவர் கைது

கிளிநொச்சி மே 3
மாசார் காட்டுப்பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் பளைப் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாசார் காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.
தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் பொலிஸார் குறித்த காட்டுப் பகுதிக்குச் சென்று கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டதுடன் ஒருவரையும் கைது செய்தனர்.
இவரிடமிருந்து 20 போத்தல் கசிப்பு, 1 பெரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஜ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி, ரணில் தோல்வி

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மே 3

அரசதலைவரும் தலைமை அமைச்சரும் ஆட்சியைக் கொண்டு நடத்துவதில் தோல்வி அடைந்துள்ளனர். தற்கொலைத் தாக்குதல் தொடர்பில பொறுப்புக்கூறவேண்டியவர்களான இவர்கள் வேடிக்கையான கதைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
முன்னணியினர் தமது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய மே தினக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் ஆட்சியாளர்கள் தோல்வியடைந்துள்ளார்கள். மகிந்த ராஜபக்ச நாட்டைஇருண்டயுகத்துக்குள்கொண்ட சென்றார். 2015இல் ஜனநாயக ஆட்சி என்ற கோசத்துடன் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சிப்பீடம் ஏற்றனர்.
பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பான அரச தலைவர் தனக்கு அதிகாரிகள் எதனையும் கூறவில்லை என்கின்றார்.
தலைமை அமைச்சர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் இத்தனை அழிவுகள் இடம்பெற்றிருக்காதுஎன்றுகூறுகின்றார். இது வேடிக்கையாக இருக்கின்றதல்லவா?
பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு. தீவிரவாதம் ஒரு மதத்தை மையப்படுத்தி இனக் குழுவொன்றிலிருந்தே உருவாகியுள்ளது.
முஸ்லிம் மக்கள் இந்தத் தீவிரவாதிகளை எளிதாக உணர்ந்து கொள்ளமுடியும். இந்தத் தீவிரவா தத்தை ஒழிப்பதற்கு அந்த சமுகத்தாலேயே முடியும். ஆகவே அந்த மக்கள் இது தொடர்பில் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு உதவ முன்வரவேண்டும் - என்றார். (த-61)

## காட்டுச் சட்டங்களை இயற்றி தமிழர் வாழ்வை கெடுக்காதீர்

### சிவமோகன் எம்.பி. கோரிக்கை

மன்னார், மே 3



அப்பாவி பொதுமக்கள் மீதான தற்கொலைத் தாக்குதல்களை ஏற்கவோ அனுமதிக்கவோ முடியாது. அதைச் சாட்டாக வைத்துக் கொண்டு காட்டுச் சட்டங்களை இயற்றி, அமைதியாக வாழும் தமிழ் இளைஞர்களின் வாழ்வைச் சீர்குலைக்காதீர்கள்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பெரும் இடரை நாடு சந்தித்திருந்தது.
இதனையடுத்து பல்வேறு முயற்சிகளை சிங்கள தேசம் எடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக புதிதாக பல காட்டுச்சட்டங்களை இயற்றுவதற்கான நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றார்கள். பழைய அடாவடித்தனங்களில் ஈடுபட்டவர்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்து தங்களது கையில் வைத்துக் கொண்டு அடக்கு முறையின் கீழ் மக்களை வைத்திருக்க நினைக்கிறார்களோ என்று சந்தேகம் எழுகிறது.
தீவிரவாதத்தை அடக்குவதில் பல நியாயப்பாடுகள் இருக்கலாம். அதை வைத்துக் கொண்டு சுமுகமாக அமைதியாக வாழும் தமிழ் இளைஞர்களின் மீதும் இவர்களது இந்தச் சட்டங்கள் பாயக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.
எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமாக இருந்தால் அது பன்னாட்டு நியமங்க ளைக் கடைப்பிடித்து அந்த நியமங்களின் கீழ் வரையப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாகத்தான் இருக்க வேண்டும்.
தனியே சிங்கள இராணுவத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படும் காட்டுமிராண்டித்தனத்துக்கு விட்டுக் கொடுக்கக்கூடிய நிலை எதிர்காலத்தில் சிக்கல்க ளைக் கொண்டு வரும் என்பது மறுக்க முடியாத உண்மை - என்றார். (த-213)

## வனாத்துவில்லுவவில் பயிற்சி: சந்தேகநபர்கள் ஐந்து பேர் கைது

கொழும்பு, மே 3
வனாத்துவில்லுவ பிரதேசத்தில் இஸ்லாமிய அடிப்படை வாதக் குழுக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஹெப்பிட்டிக்கொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்க ளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஹெப்பிட்டிக்கொல்லாவப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ)

## இலங்கைத் தாக்குதல்கள் முன்னரே திட்டமிட்டவை

### நியூஸிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்கிறார் வின்ஸ்டன் பீட்டர்ஸ்

கொழும்பு, மே 3
இலங்கையில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது என்று நியூசிலாந்து தலைமைஅமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.
கிறைஸ்ற் தேவாலய பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையில் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தத் திட்டமிடப்பட்ட தாக அவர் தெரிவித்துள்ளார்.
கிறைஸ்ற் தேவாலயத்திலுள்ள இரு பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் 40க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பழிவாங்கும் நோக்கில் இலங்கையிலுள்ள தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்திருந்தார். எனினும் இதனை மறுத்திருந்த நியூசிலாந்து தலைமைஅமைச்சர், இலங்கைத் தாக்குதலுக்கும் நியூசிலாந்துத் தாக்குதலுக்கும் தொடர்பில்லை என்று கூறியிருந்தார்.
இந்த நிலையில் நியூசிலாந்தின் துணை தலைமைஅமைச்சரும் அந்தக் கூற்றை மறுத்து நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.
தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் நியூசிலாந்தை இலங்கை தவறாக பயன்படுத்திக் கொண்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்கள் ஒன்றும் இல்லாமல் அடிப்படையற்ற குற்றச்சாட்டு முன்வைக்க ப்பட்டுள்ளது.
கிறைஸ்ற் தேவாலய பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையில் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தத் திட்டமிட்டிரு ந்தனர் - என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## இலங்கையிலுள்ள சீனர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

கொழும்பு, மே 3
இலங்கையில் உள்ள சீனத் தூதரகம், சீன நிறுவனங்கள், சீன குடிமக்கள் மற்றும் சீனாவின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் பொருளாதார, வணிக திட்ட பகுதிகளின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு இலங்கை அரசிடம் சீனா கோரியுள்ளது.
இது தொடர்பான கோரிக்கை அடங்கிய குறிப்பு, அயலுறவுத்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்தும் சிக்கலாக உள்ளது என்றும் எனவே, இலங்கையில் உள்ள சீன நிறுவனங்களுக்கு மேலதிக பாதுகாப்பு தேவைப்படுவதாகவும், சீனா அந்த குறிப்பில் வலியுறுத்தியுள்ளது.
சீனா முக்கியமான, நட்பு பங்காளர் என்றும், அது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது என்றும், குறிப்பிட்டுள்ள இலங்கை அயலுறவுத் துறை அமைச்சு, சீனர்களினதும், சீன நிறுவனங்களினதும் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனாவுக்கு உறுதி அளித்துள்ளது.
இதேவேளை கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் சிக்கி 4 சீன விஞ்ஞானிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## 1983இல் தமிழர்களுடன் யாருமே இல்லை இன்று முஸ்லிம்களுடன் நாம் உள்ளோம்!

### ஐ.ம.மு உபதலைவர் பாஸ்க்கரா தெரிவிப்பு

கொழும்பு, மே 3
1983ஆம் இனக் கலவரத்தின் போது எம்முடன் எந்தச் சமூகத்தவரும் இருந்திருக்கவில்லை. இன்று இஸ்லாமிய சகோதரர்கள் எமது சமூகத்தைப் போல் பாதிப்புறக் கூடாது. பாதிக்காமல் பாதுகாப்பது சிங்கள, தமிழ் சமூகங்களாகிய எமது தார்மீகக் கடமை.
ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் சி.பாஸ்கரா தெரிவித்தார்.
அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களுக்கிடையிலான ஒற்றுமையும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பறங்கிய மக்களுக்கான ஒற்றுமையும் கட்டியெழுப்பப் பட்டுபுரிந்துணர்வுகள் வளர்க்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்நோக்கி நகர்த்தும் தறுவாயில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
குருதி ஆறு ஓடும் என்ற கிழக்கு மாகாண ஆளுநரின் கூற்றையும், சமூக வலைத் தளங்களில் பரப்பப்பட்ட இன, மத, குரோதக் கருத்துக்களையும் உற்றுநோக்கியிருப்பினும் பயங்கரவாத ஊடுருவலை இந்த அரசு தடுத்திருக்கலாம்.
புலிகளின் போராட்டம் கொள்கை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்று அரசதலைவர் உண்மையைக் கூறுகிறார். முன்னைய காலத்தில் வடக்கு -கிழக்கு குண்டுவெடிப்பின் போது வடக்கு-கிழக்கு அறியாத தமிழர்களும் புலிகளாகப் பார்க்கப்பட்டுசிறையிலடைக்கப்பட்டனர்.
இலங்கைக் குண்டு வெடிப்புக்குப் பின்னர் இலங்கை முப்படையினரும் செயற்பட்ட விதங்கள் மிகமிகப் பாராட்டப்படவேண்டியவை. உலகின் மிகச் சிறந்த உயர்தர நிபுணத்துவத்தை அவர்களின் செயற்பாட்டில் காணக்கூடியதாகவுள்ளது. அவர்கள் உலகின் சிறந்த போராளிகளாக பன்னாடுகளால் போற்றப்பட்ட புலிகளுடன் போராடி வென்ற அனுபவசாலிகள் என்பதும் கவனிக்கவேண்டியது.
இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோர்களை [illegible] பயங்கரவாதத்தை [illegible]கின்ற அடிப்படைவாத அமைப்புகளுக்குத் துணைபோகும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள் மீதும் நேர்மையான ஆணைக்குழு அமைத்து விசார்ணை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் தீவிரவாதக் கருத்தைப் பரப்பும் ஆயுதக் குழுக்களை உருவாக்கி, கோவில்களை தாக்கியழித்த தீவிரவாதத்துடன் தொடர்புபட்ட அரசியல் வாதிகள் மற்றும் தீவி ரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்பட்டபோது பிணையில் எடுத்துவிட்ட அரசியல் வாதிகளின் உண்மை முகம் வெளியில் தெரியவரும் என்று அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மன்சூர் எம்.பியின் சாரதி கைது

அம்பாறை, மே 3
சம்மாந்துறை மலையடிக்கிராமத்தில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரின் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவரது தாயாரின் வீட்டுக்கு அருகிலிருந்தே ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நாடு முழுவதும் இராணுவம், பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேமசிறிக்கு ஆபத்து கைதாகும் சாத்தியம்!

கொழும்பு, மே 3

ஈஸ்ரர் ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை தடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ விரைவில் கைது செய்யப்படவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொழும்பு ரெலிகிராப் ஊடகம், இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஹேமசிறி பெர்னான்டோவுக்கு எதிராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச ஆறு வெவ்வேறு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்துள்ளார். பொலிஸ் தலைமையகம், கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, கட்டான, மட்டக்களப்பு ஆகிய பொலிஸ் நிலையங்களிலேயே இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவையும், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவையும் கைது செய்ய வேண்டும் என்றும் விஜேதாச ராஜபக்ச கோரியிருந்தார்.

இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், ஹேமசிறி பெர்னான்டோ கைது செய்யப்படவுள்ளார் என்று அரச தலைவர் சூசகமான தகவலை வெளியிட்டுள்ளார். இந்தக் கூட்டத்தில் புதிய பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கோட்டேகொடவை அவர் அறிமுகம் செய்து வைத்திருந்தார். பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடந்த 40 நிமிட கலந்துரையாடலிலேயே ஹேமசிறி பெர்னான்டோவின் கைது தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.

ஈஸ்ரர் தாக்குதல்களுக்கு முன்னதாக, இதுகுறித்து அரச தலைவரை, அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜயவர்த்தன தனியாகச் சந்தித்து விளக்கமளித்தது குறித்து, ஹேமசிறி பெர்னான்டோ விரிவாக அறிந்திருந்தார்.

சிங்கப்பூரில் இருந்தபோது, அரச தலைவர் சிறிசேனவுக்கு தொலைபேசி ஊடாகவும் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

தற்போது இந்த தகவல் கசியும் என்ற பயத்தில், ஹேமசிறி பெர்னான்டோவை மௌனமாக்குவதற்காக அவரைக் கைது செய்வதற்கான நகர்வு முன்னெடுக்கப்படுகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

# ஞானசாரர் கூறிய கருத்துக்களை கவனமாக ஆராயவேண்டியுள்ளன

## சு.கவின் சுமதிபால எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, மே 3

அடிப்படைவாதிகள் குறித்து கலகொட அத்தே ஞானசார தேரர் போன்றோர் தெரிவித்த கருத்துக்கள் குறித்தும் நாம் இனிமேல் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டு கலகொட அத்தே ஞானசார தேரர், சில அமைப்புக்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவர் கூறியவை இன்று உண்மையாகியுள்ளன. அவர் அந்தக் கருத்துக்களை அன்று கூறிய விதம், அவரின் நடவடிக்கை, பயன்படுத்தப்படும் வார்த்தை என்பன குறித்து விமர்சிக்கப்பட்டதேயொழிய, அவரது கருத்துத் தொடர்பாக எவரும் கவனத்திற் கொள்ளவில்லை.

அவர் கூறிய கருத்துக்களை ஆராய வேண்டும். கடந்த காலங்களில் அடிப்படைவாதம் குறித்து அவர் கூறிய கருத்துக்களை நாம் கவனத்தில் எடுக்கவில்லை. மேல்மாகாணத்தின் முன்னாள் ஆளுநரான அலவி மௌலானாவும் இஸ்லாம் பயங்கரவாதம் குறித்த சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இனிமேலாவது இது குறித்து அவதானம் செலுத்த வேண்டும். ஞானசார தேரர் போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா அமைக்கும் பல்கலைக்கழகம் தொடர்பிலும் தற்போது பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. பல்கலைக்கழகத்துக்கான அனுமதியை கடந்த அரசின் காலத்தில் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும வழங்கியுள்ளார். இது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையுடனே அமைக்கப்படுகின்றது. இந்த விடயம் குறித்து வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (த)

# சீனாவிடம் 100 மில். டொலர் கடன் வாங்குகிறது இலங்கை

கொழும்பு, மே 3

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திப் பணிகளுக்காக, 100 மில்லியன் டொலர் கடனை சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சே இந்தக் கடனைப் பெறவுள்ளது.

துறைமுக நகருக்கான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்த 100 மில்லியன் டொலர் கடன் பெறப்படுகிறது. இந்தக் கடன் வட்டியின்றி வழங்கப்படுகிறது என்றும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியில், துறைமுக நகருக்கான நிலத்தடி சுரங்கப்பாதை, கொழும்பு சைத்திய மாவத்தையில் இருந்தான வீதி ஆகியன அமைக்கப்படவுள்ளன.

தற்போதைய வீதி தற்காலிகமானது. காலிமுகத்திடல் மற்றும் கோல்பேஸ் விடுதி ஆகிய வற்றுக்கு இடையூறின்றி, புதிய வீதி அமைக்கப்படும். (ஒ.5)

# பெண்கள் அணியும் ஆடைகளுடன் கைது

கொழும்பு, மே 3

பெண்கள் அணியும் 28 ஆடைகளுடன் அநுராதபுரத்தில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில நாள்களாக இடம்பெறும் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்துவரும் நிலையிலேயே நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் திகாரியில் இருந்து அநுராதபுரம் நோக்கி வாகனத்தில் இவற்றைக் கொண்டு சென்ற போதே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் திகாரிப் பகுதியைச் சேர்ந்த 41 மற்றும் 47 வயதுடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஒ.5)

# ஸஹ்ரானுடன் ஒளிப்படம் எடுத்தவரும் கைது

கொழும்பு, மே 3

தடை செய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் ஸஹ்ரானுடன் ஒளிப்படம் எடுத்துக்கொண்ட 31 வயதான முஸ்லிம் இளைஞர், கெக்கிராவை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரத்கடவலை பிரதேசத்தில் நகை அடகு வைக்கும் நிலையத்தை நடத்தி வந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நடத்தப்பட்ட தேடுதலில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளுக்காக கெக்கிராவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ.5)

# தற்கொலைதாரிகளின் விவரங்களை வெளியிட்டது பொலிஸ்

கொழும்பு, மே 3

கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் தாக்குதல்களை நடத்திய ஒன்பது தற்கொலைக் குண்டு தாரிகளின் முழுமையான விவரங்களையும் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

சஹ்ரான் காசிம் அல்லது சஹ்ரான் ஹஸ்மி தலைமையிலேயே குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவரது குடும்பத்தினரும் தாக்குதல்களிலும், தாக்குதல்களை ஒருங்கிணைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

சங்ரிலா விடுதியில் சஹ்ரான் காசிம் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தார். சஹ்ரானின் மனைவியும் மகளும், சாய்ந்தமருதில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சாய்ந்தமருது மறைவிடத்தில் குண்டைவெடிக்கச் செய்து உயிரிழந்தவர்களில், சஹ்ரானின் தந்தை மற்றும் ரில்வான், செய்னி ஆகிய இரண்டு சகோதரர்களும் அடங்கியுள்ளனர்.

சஹ்ரானின் சாரதியான, ஆதாம் லெப்பை கபூர், தற்போது கைது



மொஹமட் சஹ்ரான் | இப்ராஹிம் இல்ஹான் | இப்ராஹிம் இன்சாப் | மொஹமட் முபாரக்



மொஹமது ஹஸ்துன் | அஹமட் முவான் | மொஹமட் அஸாத் | அப்துல் லத்தீப் | பாத்திமா இல்ஹாம்

செய்யப்பட்டுள்ளார்.

இவர், சாய்ந்தமருது மறைவிடத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்த சஹ்ரானின் சகோதரர்களில் ஒருவரான செய்னியின் மனைவியின் தந்தை ஆவார்.

சங்ரிலா விடுதியில் சஹ்ரானுடன் இணைந்து மஹவில கார்டன், பேஸ்லைன் வீதி, தெமட்டகொடவைச் சேர்ந்த இல்ஹாம் அகமட்டும் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தார். இவரது தந்தையான மொகமட் யூசுப் மொகமட் இப்ராஹிம் மற்றும் இரு சகோதரிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சினமன் கிராண்ட் விடுதியில் மஹவில கார்டன், பேஸ்லைன் வீதி, தெமட்டகொடவைச் சேர்ந்த இன்சாப் அகமட் தாக்குதல் நடத்தியுள்ளார். அவர், சங்ரிலா விடுதி குண்டுதாரிகளில் ஒருவரான இல்ஹாமின் சகோதரராவார். இவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

கிங்ஸ்பெரி விடுதியில், கொழும்பு 12 ஐ சேர்ந்த, மொகமட் அஸ்ஸாம் முபாரக் மொகமட் குண்டு வெடிப்பை நிகழ்த்தினார். இவரது மனைவி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில், கொழும்பு, மட்டக்குளியை சேர்ந்த, அகமட் முவாஸ் என்ற தற்கொலைக் குண்டுதாரி தாக்குதலை நடத்தினார். அவரது சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு கடுவாப்பிட்டிய செபஸ்தியார் தேவாலயத்தில், வாழைச்சேனையைச் சேர்ந்த, மொகமட் ஹஸ்துன் குண்டு வெடிப்பை நிகழ்த்தினார். அவரது மனைவியான புலஸ்தினி ராஜேந்திரன் எனப்படும் சாராவும், சாய்ந்தமருது மறைவிடத்தில் நடந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில், காத்தான்குடியைச் சேர்ந்த மொகமட் நாசர் மொகமட் அசாட் என்ற தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தார்.

தாஜ் சமுத்ரா விடுதியில் குண்டை வெடிக்க செய்ய முயன்று தோல்வி கண்ட வெல்லம்பிட்டி, கம்பளை ஆகிய முகவரிகளைக் கொண்ட அப்துல் லதீப் ஜமீல் முகமட் என்ற தற்கொலைக் குண்டுதாரி, தெகிவளையில் உள்ள றொப்பிக்கல் இன் என்ற சிறிய தங்கு விடுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தார்.

இவரது மனைவி மற்றும் மனைவியின் சகோதரர்கள் இருவர் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்ரிலா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட இல்ஹாம் அகமட்டின், மனைவியான பாத்திமா இல்ஹாம், தெமட்டகொடவில் உள்ள அவரது வீட்டில் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தார் என்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் புலனாய்வாளர்களும் லட்சம் படையினரும் களத்தில்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 3

பயங்கரவாதத்தை வெற்றிகொள்ள சகல நாடுகளும் ஒன்றிணைந்து எதிர்கால நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும். அவற்றின் ஒத்துழைப்புடன் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளோம். எமது புலனாய்வுப் பிரிவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படையினரும் அனைத்து நடவடிக்கைகளிலும் முறையாக ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புலனாய்வுத் தகவல்கள் மற்றும் சிறப்பு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதே எமது எதிர்பார்ப்பு. நாம் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். எமது பாதுகாப்பும் தேசிய மற்றும் பன்னாட்டுத் தரப்பினரதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும்.

**அரசியல் சுயநலவாதிகள்**

தமது அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் அரசியல் அமைப்புக்களைக் கொண்ட போலி தேசப்பற்றாளர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய ஊடகங்கள் தொடர்பில் நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அவர்களின் எதிர்பார்ப்பெல்லாம் வெசாக் பண்டிகைக்கு முன்பதாக நாட்டில் மத ரீதியான மோதல்களைத் தோற்றுவிப்பதே. அதன்மூலம் வெசாக் பண்டிகையைச் சீர்குலைப்பதற்கான பின்புலத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதை நான் பொறுப்புடன் கூற விரும்புகின்றேன்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நான் நிஹாப் மற்றும் புர்கா உடைகளுக்கான தடைக்கு நான் எதிர்ப்புத் தெரிவித்ததாக சில ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டன. உண்மையில் முஸ்லிம் தலைவர்கள் மேற்கொண்ட இந்த யோசனைக்கு முழு அமைச்சரவையும் இணக்கம் தெரிவித்தது. எனினும் ஊடகங்கள் மேற்கொண்ட இந்தப் பொய்ப் பரப்புரையில் சாதாரண மக்கள் மட்டுமன்றி மதத் தலைவர்களும் ஏமாற்றப்பட்டனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர் அபு பக்கர் அல் பக்தாதி நேற்றுமுன்தினம், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் காணொலி ஒன்றில் தோன்றி தகவலொன்றை வெளியிட்டார். அந்தத் தகவல் தொடர்பில் பன்னாட்டுப் புலனாய்வுப் பிரிவு விசாரணை மேற்கொண்டுள்ளது. அவரிடம் இறுதியாகவிருந்த அதிகார பிரதேசத்தை சிரியாவின் பாகஸ் நகரில் குர்த்தி முதன்மை படையினர் கைப்பற்றியதற்குப் பழிவாங்கும் வகையில் அனைத்துத் தாக்குதல்களையும் மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் கத்தோலிக்கர்கள் மீது நடத்திய தாக்குதல்களில் தாம் மகிழ்ச்சியுறுவதாகவும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகில் எந்தவொரு நாட்டின் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு நாம் தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். இது முழு உலகுக்கும் அச்சுறுத்தலான தகவல். நாம் எமது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டியுள்ளது.

தாக்குதல் மேற்கொண்ட பெரும்பாலானோர் சட்டத்தின் முன் நிறுத்த ப்பட்டுள்ளனர். தாக்குதல்களை நடத்துவதற்கு எதிர்பார்த்து வைத்திருந்த வெடிபொருள்கள் மற்றும் உபகரணங்களில் பெரும்பாலானவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றை தற்போதைய சந்தர்ப்பத்தில் வெளியிடுவது உசிதமல்ல - என்றார். (த)

# பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடா

## வரதராஜப்பெருமாள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 3

நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளையடுத்து மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளவடக்கு கிழக்கு இணைந்த முன்னாள் மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், இன, மத ரீதியாக அனைவரிடத்தேயும் ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டுமென்று வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மக்கள் இன்னமும் மீள முடியாமல் இருக்கின்றனர். அரசும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் திகைத்துப் போயுள்ளது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் இத்தகைய செயற்பாட்டை நிறுத்துமாறு கோரவும் முடியாதுள்ளது.

இராணுவத்தைக் கொண்டு முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் பொது மக்களைப் பாதிக்கின்ற வகையில் அல்லது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டில் பல்வேறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பயங்கரவாதச் சம்பவத்தை சில அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் தங்கள் அரசியல் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலைமையும் இருக்கின்றன.

கடந்த தேர்தல்களில் வீழ்ச்சியைச் சந்தித்தவர்கள் இந்தச் சம்பவத்தை வைத்து கட்சிகள் மீது சேறு பூசுவதும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டுகின்ற மோசமான நிலைமையும் உள்ளது.

ஆகவே இப்போதுள்ள சூழலில் நாட்டிலுள்ள அனைத்து இனங்கள் மதங்களிடத்தே ஒற்றுமையையும் நம்பிக்கையையும் ஏற்பட்டுத்த வேண்டியது தான் மிக அவசியமானது. ஆதனை மதத் தலைவர்கள் சமூக தலைவர்கள் அரசியல் தலைவர் இணைந்து செய்ய வேண்டிய பொறுப்பும் இருக்கின்றது. அதனை விடுத்து மீண்டும் இனங்கள், மதங்களிடையே முரண்பாடுகளைத் தூண்டி விடக் கூடாது.

சமயத் தலைவர்கள் ஒற்றுமையாக ஒருமைப்பாட்டையும் ஒருவரையொருவர் மதிக்கின்ற நிலைமையையும் ஏற்படுத்த வேண்டும்- என்றார். (த-ரி1)

# தாக்குதலாளிகள் சிலர் எஞ்சி உள்ளனர்தான்

## அமெ. தூதுவரின் கருத்தை ஆமோதிக்கின்றார் ரணில்

கொழும்பு, மே 3

ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய இன்னும் சிலரே எஞ்சியுள்ளனர் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய சிலரே இன்னமும் கைது செய்யப்படாமல் உள்ளனர்' என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும் இதே கருத்தை சில தினங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



# ரணசிங்க பிரேமதாசவின் ஞாபகார்த்த நிகழ்வு

கொழும்பு, மே 3

மறைந்த முன்னாள் அரசதலைவர் ரணசிங்க பிரேமதாசவின் 26ஆவது ஞாபகார்த்த நிகழ்வு கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள ரணசிங்க பிரேமதாசவின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது.

அரசதலைவர் மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருமதி.ஹேமா பிரேமதாச உள்ளிட்ட குடும்ப உறவினர்களும் கலந்துகொண்டிருந்தனர். (த)

# பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றாராம் ராஜித

## இழப்பீடு கேட்கவுள்ளாராம் உதய கம்மன்பில எம்.பி.

கொழும்பு, மே 3

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புகளைக் கொண்டிருந்தேன் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன முன்வைத்த குற்றச்சாட்டுப் பொய்யானது. அதனால் அவரிடம் 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரவுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தேன் என்றுகூறி நானும் அந்த அமைப்பின் செயலரும் உள்ள ஒளிப்படம் ஒன்றை அமைச்சர் ராஜித வெளிப்படுத்தினார். அது பொய். எனது தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படும் வகையில் அவர் இவ்வாறான கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

இதுதவிர, 2015 டிசெம்பர் 8ஆம் திகதி சிறிலங்கா தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலர் எனக்குக் கடிதமொன்றை அனுப்பினார். அதாவது, சிங்கள மொழிபெயர்ப்பில் குர் ஆன் வெளியிடப்படவுள்ளதாகவும் அந்தப்பிரதிகளை கையளிப்பதற்கு நேரம் வழங்கக் கோரியும் தான் அந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வீட்டுக்கு வந்து எனக்கு புத்தகம் வழங்குகின்றார்கள் என்றால் அதனை மறுக்க முடியுமா? அந்த வகையில் நான் அந்த புத்தகத்தை வாங்கிக்கொண்டேன்.

அப்துல் ரஸாக் என்பவர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலர் அல்ல. அவர் சிறிலங்கா தௌஹீத் அமைப்பின் செயலரே. இந்த அமைப்பினர் எனக்கு மட்டும் நூல்களை வழங்கவில்லை. அமைச்சர் ரவீந்த சமரவீர, தமிர அமில தேரர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஆகியோருக்கும் வழங்கி உள்ளார்கள். அதற்கான ஒளிப்படங்களை இங்கு காண்பிக்கின்றேன். இதனைவிடவும் நான் ஒரு புதுமையைக் காட்டுகின்றேன். என்னுடன் நெருக்கமாக இருப்பதாக கூறும் அதே ரஸாக் அமைச்சர் ராஜிதவுடனும் இருக்கின்றார். அப்படியென்றால் யார் அதிக நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றார்கள்? - என்றார். (த-61)

# தாக்குதலைக் காரணம் காட்டி ரணில் தன் தேவையை நிறைவேற்ற முயற்சி

## சாடுகின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, மே 3

தீவிரவாதத் தாக்குதல் ஊடாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள முயற்சிக்கின்றார். பிற நாட்டு இராணுத்தினர் எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

பொதுமக்கள் முன்னணியின் (பொது ஜன பெரமுன) மே தினக் கூட்டம் நேற்றுமுன்தினம் கோட்டை மாநகர சபை முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி அரசு இப்போது நாட்டை நிர்மூலமாக்கிவிட்டது. கடந்த 4 ஆண்டுகளாக அரசு முன்னெடுத்த முறையற்றசெயற்பாடுகளால்பன்னாட்டு தீவிரவாதம் தற்போது நாட்டுக்குள் ஊடுருவியுள்ளது. அரச புலனாய்வுப் பிரிவைத் தேசிய பாதுகாப்புக் கருதிப் பயன்படுத்தவில்லை. கடந்த அரசைப் புலனாய்வு செய்யவே பயன்படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்குத் தற்போது காணப்படும் அச்சுறுத்தலைப் பன்னாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன. திருகோணமலைத் துறைமுகத்தை தன்தாக்கிக் கொள்ள அமெரிக்கா ஆரம்பகாலம் தொட்டு முயற்சிக்கின்றமை அனைவருக்கும் தெரிந்ததே.

ஐ.எஸ். தீவிரவாதிகள் இரண்டாவது தடவையாகத் தாக்குதலை மேற்கொள்ளவுள்ளனர் என்று அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளதன்பின்னணியை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐ.எஸ். தீவிரவாதிகளை உருவாக்கியது யார்? அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஏனைய நாடுகள் மீது தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெறும்போது உதவி வழங்குகின்றோம் என்று நிபந்தனைகளற்ற விதத்தில் ஊடுருவி அந்த நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும். இந்த நிலைமை எமது நாட்டுக்கு ஏற்புடையதல்ல - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பகுதிகளில்தான் இராணுவக் கெடுபிடிகள்!

*கூட்டமைப்பின் மே தின நிகழ்வில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு*



கிளிநொச்சி, மே 3

தமிழர் தேசங்களில் மட்டுமே இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ்த் தேசிய மே நாள் பச்சிலைப்பள்ளி நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாக்குதல்கள் நடைபெறாத இடங்களிலெல்லாம் சோதனைச் சாவடிகள் தமிழர்களின் பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கின்றன. தாக்குதல் நடைபெறப்போவதாக பன்னாட்டுப் புலனாய்வு, அயல் புலனாய்வுகள் போன்றவை அச்சுறுத்தி இருந்தும்கூட சாகடிக்கப்படவுள்ளோர் தமிழர்கள்தான் என்பதால் அரசு கண்டுகொள்ளாமல் இருந்திருக்கிறது.

தமிழர்களைத் தொடர்ந்தும் இன அழிப்பு செய்வதில் இலங்கையின் ஒவ்வொரு அரசுகளும் சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எமது தொழிலாளர்களின் பல வளங்களை இராணுவத்தினர் இன்னமும் சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்துகிறார்கள். சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்ற பெயரில் எமது மக்களினுடைய விவசாய காணிகள் பலதை பலவந்தமாக அபகரித்திருக்கிறார்கள். தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பின்பே இந்த அரசும் பன்னாடுகளும் பன்னாட்டுத் தீவிரவாதம் எது விடுதலைப் போராட்டம் எது என்பதைக் கண்டுகொண்டிருக்கிறது.

அண்மையில் இஸ்லாமியர்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களை தீவிரவாத தாக்குதல் என்று சாதாரணமாக எண்ணிவிட முடியாது. அது தமிழ் மக்கள் மீதான இரண்டாவது இன அழிப்பு. சரியாக 10 வருடங்களின் பின்னர் இவ்வாறான அழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 வருடங்களிற்கு முன்னர் இன அழிப்பை இலங்கை அரசு மேற்கொண்டிருந்தது. எனவே நாம் இதனைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது. அந்த தீவிரவாத தாக்குதலில் எந்தச் சிங்கள மகனும் கொல்லப்பட்டிருக்கவில்லை. தமிழ் கிறிஸ்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட தாக்குதலாகவே பார்க்க வேண்டுமேயன்றி சாதாரணமாக எண்ணி விட்டுவிட முடியாது.

இறுதியாக நடந்த இந்த தாக்குதலுக்கு பின்னால் தமிழர்களுடைய உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. ஆனால் பன்னாடுகள் இலங்கையை இரக்கத்தோடு பார்க்கத்தொடங்கியுள்ளன. தமிழர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள் - என்றார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலருமான சுரேன் சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மே தின அறிவிப்பை வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா விடுத்தார்.

***சிவஞானம்***

அங்கு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உரையாற்றுகையில்,

இலங்கையில் எவ்வாறு முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளர்களை சுரண்டுகின்றனர் என்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். நாட்டின் வளர்ச்சிக்கு எமது பங்களிப்பு மிக அவசியம். நாட்டின் வளர்ச்சிக்காக வடக்கு மாகாணம் 4 வீதமான பங்களிப்பையே செய்கின்றது - என்றார்.

***சேனாதிராசா***

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா உரையாற்றுகையில்,

குண்டு தாக்குதலின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள், சோதனை நடவடிக்கைகள் பற்றித் தெரிவித்தார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று நாடாளுமன்றில் தமிழருக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தும் சாத்தியப்படவில்லை என்று தெரிவித்தார். தீவிரவாத தாக்குதல் மற்றும் அரசதலைவரால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களால் தீர்வு சாத்திய மற்று போனது என்பதாக அவரது உரை தொடர்ந்தது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர், உறுப்பினர்கள், தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(த-6)

# பூஜித், ஹேமசிறி பலிக்கடாக்கள்!

## *சீறுகிறார் பொன்சேகா*

*கொழும்பு, மே 3*

*ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலை அடுத்து நாட்டின் பாதுகாப்பு குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரே பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.*

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பாதுகாப்பில் ஏற்பட்ட சரிவுக்கு உயர் அதிகாரிகளான ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோரே பொறுப்பு. இந்தத் தாக்குதலையடுத்து ஹேமசிறி பெர்னாண்டோ பதவி விலகினார். பொலிஸ்மா அதிபருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது. அவர்கள் இந்தச் சம்பவத்துக்காக பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

(ஒ.5)



# வவுணதீவு கொலையில் கைதான அஜந்தனை விடுவிக்க இணக்கம்

## *மைத்திரி கூறினார் என்று மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு, மே 3

வவுணதீவு பொலிஸார் படுகொலைகள் தொடர்பில் கைதான முன்னாள் போராளி அஜந்தன் விடுதலை செய்யப்படுவார் என்று அரசதலைவர் உறுதியளித்துள்ளார் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னர் கிடைக்கப்பெற்றுள்ள புதிய தகவல்களின் அடிப்படையில், பொலிஸாரைக் கொலை செய்தது தேசிய தௌஹீத் ஜமாத்தின் மொஹமட் சஹ்ரான் குழுவினர் என்று தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு வவுணதீவில் கடந்த நவம்பரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பொலிஸார் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

பொலிஸாரைக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அஜந்தனைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். நான்கு பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளி கதிர்காமத்தம்பி ராசகுமாரன் என்ற அஜந்தனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன். அவரை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பதில் பொலிஸ் மாஅதிபருக்கும், சட்டமா அதிபருக்கும் பணிப்புரை விடுக்கிறேன் என அரசதலைவர் கூறினார் என்று அமைச்சர் மனோ கணேசன் நேற்று முன்தினம் தெரிவித்தார் என்று மனோ கணேசனின் அலுவலகம் தெரிவித்தது.

அஜந்தனை விடுவிக்கு மாறு கூட்டமைப்பு எம்.பிக்களும் சில நாள்களுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்தனர்.

(த)



# சஹ்ரானின் ஊடகப் பிரதானி என ஒருவர் கைது

கொழும்பு, மே 3

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச்சேர்ந்தவரான சஹ்ரானின் ஊடக பிரிவின் பிரதானியாக செயற்பட்டு வந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் காத்தான்குடியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடியைச்சேர்ந்த 38 வயதுடைய ஒருவரையே நேற்றுக் கைது செய்து சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டு. மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாலை பொலிஸார் முன்னெடுத்த சுற்றி வளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் புதிய காத்தான்குடியைச் சேர்ந்த 38 வயதுடைய மொஹமட் மன்சூர் மொஹமட் பைரூஸ் என்பவர் ஆவார்.

குறித்த நபர் மருந்தகமொன்றில் கடமையாற்றி வந்துள்ளதுடன் சஹ்ரானின் ஊடக பிரிவின் பிரதானியாக செயற்பட்டுவந்தவர் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த)

# குண்டுப் புரளியால் பதறிய பணியாளர்கள்

கொழும்பு, மே 3

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் வெடிகுண்டு இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட நிலையில், அங்கு வெடிகுண்டு இல்லையென பாதுகாப்பு தரப்பினர் உறுதிப்படுத்தப்படுத்தியுள்ளனர்.

ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து, நாட்டின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக வெடிகுண்டுகளும் வெடிபொருள்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டு வருகின்றன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தின் மலசலகூடத்தில், கைவிடப்பட்ட நிலையில் பொதியொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் பீதியடைந்த ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறி பொலிஸாருக்கு அறிவித்தனர். குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் சகிதம் அங்கு சென்று சென்ற பொலிஸார் மற்றும் இராணுவம், பொதியை பரிசோதித்து அங்கு குண்டு அல்லது வெடிபொருள்கள் இல்லையென்பதை உறுதி செய்துள்ளனர். அதன் பின்னர் அங்கு பணியாளர்கள் வழமை நிலைக்குத் திரும்பினர்.

(ஒ.5)

# தௌஹீத் ஜமாத்தின் ஒருங்கிணைப்பாளர் விளக்கமறியலில்

கொழும்பு, மே 3

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது மொஹமட் பாரூக் மொஹமட் வவாஸ் என்பவர் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று முன்னிலைப்படுத்தினர். எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஒ.5)

# 20ஆயிரம் பேர் பாதுகாப்புக்கு களமிறக்கப்படுவர்

கொழும்பு, மே 3

நாட்டின் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 20 ஆயிரம் படையினரை சேவையில் அமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிவில் பாதுகாப்புத் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களின் பாதுகாப்புக்காக அவர்களை ஈடுபடுத்தவுள்ளதாகவும் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சிவில்பாதுகாப்புத்திணைக்களத்தினூடாக 35 ஆயிரம் படையினர் பயிற்சிகளை பெற்று வருகின்றனர். இவர்களில் 4 ஆயிரம் பேர் கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் கடமைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் முறைப்பாடு விவகாரம்

# வரலாற்றில் முதல் தடவையாக தலைமை நீதிபதியிடம் விசாரணை

புதுடெல்லி,மே 3
பெண் ஊழியர் அளித்த பாலியல் முறைப்பாட்டை விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு முன்னால் இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகய் முன்னிலையானார்.
இந்திய நீதித் துறையின் வரலாற்றில் பாலியல் முறைப்பாடு தொடர்பாக விசாரணைக்குழுவின்முன்னால்தலைமை நீதிபதி முன்னிலையாகி விளக்கம் அளிப்பது இதுவே முதல் முறை என்று குறிப்பிடப்படுகிறது. விசாரணைக் குழுவினரால் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதத்



துக்கு இணங்கத் தலைமை நீதிபதி இந்த விசாரணை யில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் நீதிபதி பாப்டே தலைமையிலான 3 நீதிபதிகள் விசாரணைக் குழு கடந்த 26 ஆம் திகதியில் இருந்து விசாரணை நடத்தி வருகிறது.
இந்தக் குழுவின் வழக்கு ஆரம்பித்த 26ஆம் திகதியன்று முன்னிலையா கிய முறைப்பாட ளித்த பெண் ஊழியர் பல்வேறு விடயங்க ளைச் சுட்டிக்காட்டி விசாரணை யில் பங்கேற்காமல் வெளியேறியுள்ள நிலையில் விசாரணைக்குத் தலைமை நீதிபதி சமூகமளித்திருப்பது குறிப்பி டத்தக்கது.



பதிவு இல்லாமல் வாக்களித்த விவகாரம்

## சிவகார்த்திகேயன், சிறிகாந்திடம் தேர்தல் ஆணையகம் விசாரணை

தமிழகம்,மே 3
வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாமல் வாக்களித்த தென்னிந்தியத் திரைப்பட நடிகர்களான சிவகார்த்திகேயன், சிறிகாந்திடம் விசாரணை நடத்தப்படும் என்று தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறினார். வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாமல் சிவகார்த்திகேயன், சிறிகாந்த் ஆகியோர் வாக்களித்த விவகாரத்தில் குற்றப்பதிவு செய்ய வேண்டி உள்ளது.
அதற்கான விசாரணையை நடத்த வேண்டி உள்ளது. அதில் காலதாமதம் ஆகலாம். அதன் பிறகு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும். அதில் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையைத் தேர்தல் ஆணையகம் உறுதி செய்யும். தற்போது அந்த விவகாரத்தை மாவட்டத் தேர்தல் அதிகாரி விசாரிக்கிறார்.
அவரிடம் இருந்து அறிக்கை பெறப்படும். விசாரணை அதிகாரி அந்த நடிகர்களைச் சாட்சியாக விசாரிக்க முடியும். அதன் பிறகு அவர் தகுந்த தண்டனையை விதிப்பார். அந்தத் தண்டனையைத் தேர்தல் ஆணையகம் உறுதி செய்யும் என்றார்.

## தாக்கவுள்ளது புயல் தயார்நிலையில் குழு!

புதுடெல்லி,மே 3
வங்கக் கடலில் தோற்றம் பெற்ற 'பெனி' புயல் இன்று இந்தியாவின் ஒடிசா மாநிலத்தைத் தாக்கும் என்று கூறப்பட்ட நிலையில், அங்கு மீட்புப்பணிகளுக்காகத் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தயார்நிலையில் உள்ளனர்.



கடந்த வாரம் உருவான பெனி' புயல் முதலில் தமிழ்நாட்டைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால் அதன் திசை மாறியதால் ஆந்திராவுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று நினைத்தனர். ஆனால்'பெனி'புயல் திசைமாறி ஒடிசா மாநிலத்தை குறிவைத்துள்ளது. ஒடிசா மாநிலம் புரி அருகே இன்று பிற்பகல் இந்தப் புயல் கரையைக் கடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'பெனி' புயல் கரையைக் கடக்கும்போது சுமார் 210 கிலோ மீற்றர் வேகத்தில் மிக பலத்த சூறாவளி காற்று வீசும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.
மேலும் பலத்த, மிக பலத்த மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் தமிழகத்தைத் தாக்கிய கஜா புயலைவிட இந்தப்புயல் 2 மடங்கு வலுவுடையது என்று வானிலை ஆய்வு மைய நிபுணர்கள் கணித்து இருப்பதால், ஒடிசாவில் 19 மாவட்டங்களில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர், தீயணைப்புப் படையினர், மற்றும் ஏனைய பணியாளர்கள், அதிகாரிகள் அனைவரும் தயார்நிலையில் உள்ளனர். பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இன்று இயங்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தந்தங்கள் விற்பதைத் தடை செய்துள்ள மலேசியா அதன் பயன்பாடும் சட்டவிரோதமானது என்கிறது. மலேசியாவின் நெகரிசெம்பிலன் என்கிற பகுதியில் ஒரு தொகை யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டன. அழகு, அலங்காரப் பொருள்களாகப் பயன்படுத்தி வந்த அவற்றைக் கைப்பற்றிக் குவித்தனர் அதிகாரிகள்.



## இன்றைய நாள்

**மேடம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விவாதம் வேண்டாம்; மன அமைதியை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும்.

**இடபம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும்; பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** சான்றோரின் ஆசி உங்களுக்கு கிடைக்கும். பணிகளில் ஆர்வமாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**கடகம்:** பொது விசயங்களில் நிதானித்து பேசுவது நல்லது. கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரத்தில் உள்ள சாதக தன்மையை பாதுகாக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். குடும்ப உறுப்பினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**கன்னி:** நட்பின் பெருமையை எண்ணி மகிழ்வீர்கள். எதிர்காலம் குறித்து நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** எண்ணமும், செயலும் சிறந்து கூடுதல் நன்மையைத் தரும். உங்களை விமர்சித்து பேசியவர் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடை வீர்கள். பண வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நல்லோரின் ஆலோசனையால் சில நன்மைகள் கிடைக்கும். தொழில், வியாபாரத் தில் உள்ள நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம்.

**தனுசு:** நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய அணுகுமுறை பின்பற்ற வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் பெறுவீர்கள். மனதில் பெருமிதம் மேலோங்கும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.


**கும்பம்:** அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபார நடைமுறை ஓரளவு சீராகும் .அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** நண்பரிடம் சொந்த விசயம் பேசுவீர்கள். நல்ல ஆலோசனை, தேவையான உதவி கிடைக்கும். கள். உபரி வருமானம் வந்து சேரும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடித்துச் சிதறியது 'க்ரூ ட்ராகன்'

## மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டம்?





வோஷிங்டன்,மே 3
மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்துடன் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் தயாரித்து வந்த 'க்ரூ ட்ராகன்' என்கிற விண்கலம், பரிசோதனையின் போது வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. எலோன் மஸ்க் தலைமையிலான அமெரிக்காவின் தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'ஸ்பேஸ் எக்ஸ்', மனிதர்களை விண்ணுக்கு அனுப்புவதற்கான இந்த விண்கலத்தைத் தயாரித்து வந்தது. இந்த நிறுவனம், நாசாவுடன் இணைந்து இதற்கான பணிகளை நீண்ட காலமாக மேற்கொண்டது. அந்த வகையில் பயணிகளை ஏற்றிக் கொண்டு விண்ணுக்குச் சென்று பூமிக்குத் திரும்பும் வகையில் மேற்குறித்த விண்கலத்தை வடிவமைத்தது.

அதன் சோதனை வெற்றி அடைந்ததால், அதில் பயணிக்கும் விஞ்ஞானிகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டன. அந்த விண்கலம், தொடர்ந்து பரிசோதனை செய்யப்பட்டது.

விண்கலத்தின் பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்தப்பட்டு, தொடர்ந்து இயந்திரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.


கேப் கனரவல் ஏவுதளத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தச் சோதனையின்போது, திடீரென விண்கலம் வெடித்துச் சிதறியது. இதனால் அந்தப் பகுதியில் புகை மூட்டம் எழுந்தது. இது தொடர்பான காணொலி இணையதளத்தில் வெளியானது. எனினும், நாசாவோ, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமோ இதை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், குறித்த விண்கலம் வெடித்துச் சிதறியதை அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாசாவுக்கான வரவு செலவுத் திட்டத் தலைவருமான ரிச்சர்ட் ஷெல்பி உறுதி செய்தார். விண்கலம் ஒழுங்கற்று இயங்கியதால், முற்றிலும் அழிந்துவிட்டதாக 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் கூறியிருப்பதாக அவர் தெரிவித்தார்.



# வெனிசுலாவில் தொடர் பதற்றம் வன்முறையில் ஒருவர் சாவு

*கரகாஸ்,மே 3*
*வெனிசுலாவின் எதிர்கட்சித் தலைவர் ஜுவைன் குவைடோ வெனிசுலா அதிபர் மதுரோவுக்கு எதிராகத் தொடர் போராட்டங்களை நடத்திவருகிறார்.*



கடந்த புதன்கிழமை அவருடைய ஆதரவாளர்களுக்கும், அரச பாதுகாப்புப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் தலையில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூடு காரணமாக ஒரு பெண் சாவடைந்தார்.

இதைக் குவைடோ தனது கீச்சகத்தில் பதிவு செய்தார். அங்கு பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் அமெரிக்காவும், ரஷ்யாவும் அறிக்கை வெளியிட்டுள்ளன. அவசியம் ஏற்பட்டால் வெனிசுலாவுக்குத் தங்கள் இராணுவத்தை அனுப்ப உள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் கூறினார்.

வெனிசுலாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடவேண்டாம் என ரஷ்யா எச்சரித்தது. ஐக்கிய நாடுகளும் வேறு சில நாடுகளும் சமாதானப் பேச்சுக்கள் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன.

இந்த நிலையில் வெனிசுலாவின் இரகசியப் பொலிஸ் பிரிவின் தலைவர் மெனுவல் ரிகார்டோ கிரிஸ்டோபர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில், "நான் இவ்வளவு காலமும் மதுரோவுக்கும் அவரது அரசுக்கும் விசுவாசமாகச் செயற்பட்டேன். இப்போது வெனிசுலா நாட்டின் நன்மைக்காகவும், அதைக் கட்டியெழுப்புவதற்காகவும் மாறிவிட்டேன்' எனக் குறிப்பிட்டுள்ளமை பேசுபொருளாகியிருக்கிறது.

# வீட்டின் மேல் விழுந்தது உலங்கு வானூர்தி

*3 பேர் சாவு*



விமானியின் கட்டுப்பாட்டை இழந்த உலங்கு வானூர்தி வீடொன்றின்மேல் விழுந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் சாவடைந்தனர். அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தின் தலைநகர் ஹோனாலுலுவில் இருந்து கயிலுவா நகருக்குச் சுற்றுலாப் பயணிகளான பெண்கள் இருவரை ஏற்றிச் சென்ற உலங்கு வானூர்தியே இவ்வாறு விபத்துக்குள்ளா னது.

விமானியின் கட்டுப்பாட்டை இழந்ததையடுத்து, அந்த உலங்கு வானூர்தி அங்குள்ள குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் விமானியும் அதில் பயணித்த பெண்கள் இருவருமாக 3 பேர் சாவடைந்தனர். சாவடைந்த சுற்றுலாப் பயணிகளில் ஒருவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்.



# முடி சூடுவதற்கு முன்னர் தனது பணியாளரை ராணி ஆக்கிய மன்னர்!

பாங்கொங்,மே 3
தாய்லாந்து மன்னர் மகா வஜிரலங்கோன் (வயது66) முடி சூடுவதற்கு முன்னர், தனது பாதுகாப்புப்படைத் துணைத் தலைவரான சுதிடா டித்ஜாய் என்பவரைத் திருமணம் முடித்தார். இவர் எதிர்வரும் சனிக்கிழமை மன்னராக முடிசூடி அரியணை ஏறவுள்ள நிலையிலேயே தனது பணியாளரை மணந்தார். 2014ஆம் ஆண்டு சுதிடா டித்ஜாய்யை தனிப்பட்ட பாதுகாப்புப்படையின் துணைத் தலைவராக நியமித்துப் பின்னர் 2017ஆம் ஆண்டில் அவரை தனது துணைப் பாதுகாவலராகவும் நியமித்தார். சுதிடா 'தாய் எயார்வேஸில்' வானூர்தி உதவியாளராகப் பணி புரிந்தவராவார். தாய்லாந்து ஊடகங்கள் இருவருக்குமிடையே காதல் மலர்ந்ததாகப் பல நாள்களாகக் கூறி வந்தது.

ஊடகங்களில் பரவிய செய்திகள் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் மன்னர் வஜிரலங்கோன், சுதிடாவைத் திருமணம் செய்தார். அதன் பின்னர் சுதிடாவைத் தாய்லாந்தின் அதிகாரபூர்வ ராணியாகவும் அறிவித்தார். இந்தத் திருமண விழாவில் நடந்த நிகழ்ச்சிகள், கோலாகலங்கள் தாய்லாந்து ஊடகங்களில் ஒளிபரப்பாகின.

தாய்லாந்தில் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தாய்லாந்து மன்னர் புமிபோல் அடுல்யாதேஜ் வயோதிபம் காரணமாகச் சாவடைந்ததிலிருந்து அரசமைப்பு மன்னராக மகா வஜிரலங்கோன் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மழுப்பலாகப் பதில் சொல்வதில் தெரேசா மே கில்லாடி



லண்டன்.மே 3
கேள்விகளுக்கு மழுப்பலாகப் பதில் சொல்வதில் பிரிட்டனின் தற்போதைய தலைமை அமைச்சரான தெரேசா மே முன்னணியில் இருக்கிறார் என்று தெரியவந்திருக்கிறது. லண்டனைச் சேர்ந்த பல்கலைக்கழகம் ஒன்று மேற்கொண்ட ஆய்விலேயே இது தெரியவந்தது. ஊடகவியாளர்கள், அல்லது அமைச்சர்களுடனான சந்திப்புகளின் போதான கேள்விகளில் 27 வீதமானவைக்கே தெரேசா மே இது வரை பதில் கூறியுள்ளார் எனவும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன. தெரேசா மே சில நுட்பமான முறையில் பதில் சொல்லும் ஆற்றலைப் பெற்றுள் ளார். அதனுடாக அவரிடம் கேட்கப்படும் கேள்விகளைத் தன்னுடைய பாணிக்கு மாற்றித் தனக்குச் சாதகமாகப் பதில் கூறுவார். அது அவருடைய திறமை என்றும கூறபபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை துரத்தித் தாக்கியதில் தாயார் சாவு, சிறுமி படுகாயம்

## கிராஞ்சியில் துயரம்

கிளிநொச்சி, மே 3

கிளிநொச்சி பூநகரி முழுங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சிப் பகுதியில் நேற்றுக் காலை யானை தாக்கியதில் தாயார் உயிரிழந்தார். 3 வயது சிறுமி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமது காணியில் உள்ள தென்னங்கன்றுகளை யானை உணவாக உட்கொண்டு கொண்டிருந்தபோது அதை சிவநேயசன் சுகாசினி என்ற குறித்த தாயார் துரத்த முற்பட்டுள்ளார். இதையடுத்து யானை அவரைத் துரத்தித் தாக்கியுள்ளது. காயமடைந்த சுகாசினி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டபோது உயிரிழந்தார். சிறுமி காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று கிளிநொச்சி மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-6,214)

## மன்னாரில்

# அந்தோனியார் திருச்சொருபம் விசமிகளால் உடைத்துச் சேதம்

மன்னார், மே 3

பள்ளகண்டல் புனித அந்தோனியார் தேவாலயத்தில் உள்ள அந்தோனியார் திருச் சொருபம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வில்பத்து சரணாலயத்தின் மத்தியில் இந்தத் தேவாலயம் அமைந்துள்ளது. சிலாபம் மறைமாவட்டத்தின் கீழ் குறித்த தேவாலயம் அமைந்துள்ளது. அந்தத் தேவாலயத்தின் அந்தோனியார் சொருபம் உடைக்கப்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் மாலை தெரியவந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-56)



## அவசரகால...

வித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடைய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவசரகாலச் சட்டம் உடனடியாக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது எவருமே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. வழமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்ற மக்கள் விடுதலை முன்னணியும்கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. நாட்டிலே சூழ்நிலை அப்படியாக இருந்நது. ஆனால் அவசரகால விதிமுறைகள் அதற்குப் பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. அந்த விதிகள் மிகவும் மோசமான முறையிலே தயாரிக்கப்பட்டுள்ளன. மக்களுடைய சுதந்திரங்கள் இலகுவாகப் பறிக்கப்படக் கூடியதாகவும், அடக்கு முறையைப் பயன்படுத்துவதற்கு இலகுவாகவும் அது தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த விதிகள் தொடர்ந்தும் இருப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. அந்த விதிகளை மாற்ற வேண்டும். அதைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். விரைவிலே அது சவாலுக்கு உட்படுத்தப்படும். ஆனால் அதற்கும் மேலாக ஒரு மாதத்துக்கும் அதிகமாக இந்த அவசரகாலச் சட்டம் நீடிப்புக்கு வருகின்ற போது நாங்கள் இதுகுறித்து மிகவும் கவனமாக ஆலோசிப்போம். தேவையில்லாமல் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதிக்க முடியாது - என்றார்.

அவசரகாலச் சட்டம் ஏற்கனவே நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போது, அதைப் பயன்படுத்தி நாட்டில் என்ன நடந்தது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட அவர் சார்ந்த கட்சி நன்கு அறிந்திருந்தது. மக்கள் கடுமையான துன்பத்தை அனுபவித்ததை அடுத்து அந்தச் சட்டத்தை நடைமுறையில் இருந்து விலக்குவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் முயற்சிகளை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தது. எனினும் ஈஸ்டர் தாக்குதலை அடுத்து நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதற்கு ஆதரவு தெரிவித்தனர். நேற்று மீண்டும் அந்தச் சட்டத்தை அனுமதிக்க முடியாது என்று சுமந்திரன் கூறியுள்ளார். (ம-21)

## தற்கொலை...

நாட்டிலே இருந்த சிங்கள மேலாதிக்கம் தான் உரிய காரணமாக இருந்திருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சுமந்திரனுடைய அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இந்தச் சந்திப்பில் செய்தியாளர் ஒருவர், 'கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்கள், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை என்பன புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு அச்சுறுத்தலாக அமையுமா?' என்று கேட்டார்.

இதற்குப் பதில் வழங்குகையிலேயே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கப்படாதது தான் சிங்கள பௌத்தர் அல்லாத மக்கள் தங்கள் நாட்டிலே சம உரித்து உடையவர்கள் என்ற நம்பிக்கையோடு வாழாமல் இருப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைக்கும் எங்களுடைய நாட்டிலே ஒரு சமூக ஒப்பந்தம் கிடையாது. எல்லா மக்களும் நாங்கள் ஒரே நாட்டில் வாழுவோம் என்று உறுதி கூறக்கூடிய சமூக ஒப்பந்தமான அரசமைப்பு இங்கு கிடையாது. அப்படியான ஒன்றை உருவாக்குவதற்காகத்தான் கடந்த மூன்றரை வருடங்களாக நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே முழுமையான ஈடுபாட்டையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்த சம்பவத்தையே வைத்து இப்போது அரசமைப்பு செய்ய முடியாது என்ற தோரணையிலே சிலர் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள். அதேபோல நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையையும் ஒழிக்கக் கூடாது, இப்படியான பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அது தேவை என்கின்ற ஒரு வாதத்தையும் முன்வைத்துள்ளார்கள். இந்த இரண்டு வாதத்தையும் நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். நாட்டிலே இனங்களுக்கு இடையில் இருக்கிற முதன்மையான பிரச்சினை தீர்க்கப்படுகின்ற வரைக்கும் இப்படியான சம்பவங்கள் நிகழுவது ஒரு விசித்திரமான விடயமாகக் கருத முடியாது. இந்த குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியின் ஒளிநாடாக்களை எடுத்துப் பார்த்தால், அதிலே முஸ்லிம் இளைஞர்களை உட்சாகப் படுத்துவதற்கு அவர் பௌத்த தீவிரவாதிகள் எப்படியாக முஸ்லிம்களைத் தாக்கினார்கள் என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறார். திகனவிலே, அழுத்கமவிலே வேறு மசூதிகள் தாக்கப்பட்ட சம்பவங்களை சுட்டிக்காட்டி சிங்களத் தீவிரவாதத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும் என்றுதான் அவர் அந்த இளைஞர்களை உற்சாகப்படுத்தி ஒரு கட்டுக்கோப்பான அமைப்பை உருவாக்கியிருந்தார். அது இறுதியாக சிங்கள பௌத்தர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படவில்லை. அது தமிழர்களுக்கும், சிறப்பாக கிறிஸ்தவர்களுக்கும், வெளிநாட்டுப் பயணிகளுக்கும் எதிராக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படியொரு மிகத் தீவிரமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு தயாரான ஒரு குழுவை அவர் தயார்ப்படுத்துவதற்கு நாட்டிலே இருந்த சிங்கள மேலாத்திக்கம் தான் காரணமாக இருந்திருக்கிறது. அப்படியான ஒன்று இல்லாமல் போகவேண்டும் என்றால், எதிர்காலத்திலே இப்படியான பயங்கரவாதம் எழாமல் இருக்க வேண்டுமாக இருந்தால், ஓர் அரசமைப்பு உருவாக வேண்டும் என்பது அத்தியவசியமானது - என்றார். (ம-21)

## தாக்குதல்....

தல்கள் நடத்தப்படலாம் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்த வாரம் இறுதியிலும் கத்தோலிக்க வழிபாட்டுத் தலங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்று எச்சரித்துள்ளார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. இதனால் ஞாயிறு வழிபாடுகளைத் தவிர்க்குமாறு கோரியுள்ள அவர் அடுத்த வாரம் கத்தோலிக்க தனியார் பாடசாலைகள் இயங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## பன்னாட்டு...

இன்று பிற்பகல் 3 மணிக்கு இலக்கம் 76, கோவில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் வணபிதா இம்மனுவல், ஆங்கிலமொழிப் பத்திரிகையாளரும் சுதந்திர ஊடகவியலாளருமான துளசி முத்துலிங்கம் கருத்துரைகளை வழங்கவுள்ளார்கள். இலங்கையில் தற்போதைய நெருக்கடியான சூழலில் ஊடக அறிக்கையிடல் பற்றிய சர்ச்சையான கருத்துக்கள் முன்வைக்கப்படு கின்றன, குறிப்பாக, வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் ஊடக அறிக்கையிடல் மற்றும் உண்மைக்குப்புறம்பான ஊடக அறிக்கையிடல் போன்ற சூழலில் சமூக ஊடகத்தடை மற்றும் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு, வெளிப்பாட்டுச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தல் போன்ற பல விடயங்கள் இன்று ஊடகத்துறைசார்ந்து பேசுபொருளாகியுள்ளன. இந்தச்சூழலில் இது பற்றிய உரையாடலுக்கான களத்தை உருவாக்கும் நோக்கில் இந்தக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். ஊடகத்துறை சார்ந்தோர் மற்றும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-21)

## வடக்கில்...

ஒருவர் கேள்வி கேட்டபோது அதற்கு அவர் அந்தக் கேள்வி முட்டாள்த் தனமானது என்று பதில் வழங்கினார். கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் தாக்குதல் இடம் பெற்றது. ஆனால் வவுனியாவில் இருந்து மட்டக்களப்பு செல்லும் வழியில் இருக்கும் சோதனைச் சாவடிகளை விட தாக்குதல் எதுவும் இடம்பெறாத வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான வீதியில் அதிகமான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டள்ளன.

எனவே திட்டமிட்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளனவா என்று மக்கள் மத்தியில் கருத்துக்கள் காணப்படுகின்றன அது தொடர்பில் உங்களுடைய நிலை என்ன என்று அந்த ஊடகவியலாளர் கேட்டார். பதிலளித்த சுமந்திரன் 'அதைப்பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. இந்தச் சூழ்நிலையில் பாதுகாப்புச் செயற்பாடுகள் செய்யப்படக் கூடாது என்று எவருக்கும் சொல்ல முடியாது. அவர்களிடத்தில் இருக்கிற தகவல்களை வைத்து அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்த முடியாது. ஆகையால் ஏன் இந்த இடத்திலே சோதனை, ஏன் அந்த இடத்திலே சோதனையில்லை என்ற கேள்விகளை இந்த இடத்திலே கேட்டுக் கொண்டிருக்க முடியாது.' என்றார். மீண்டும் அந்த ஊடகவியலாளர் அதே கேள்வியைத் தொடுக்கமுற்படும் போது 'அவர்களிடத்திலே இருக்கிற தகவல்கள் இனிமேல் நடக்கக் கூடிய தாக்குதல்கள் பற்றியனவாக இருக்கலாம். ஆனபடியால் முட்டாள்த்தனமான கேள்விகளை இந்த நேரத்திலே கேட்கமுடியாது' என்று சுமந்திரன் தெரிவித்தார். (ம-21)

## ஸஹ்ரானின்...

முதன்மைச் சூத்திரதாரியாகக் கருதப்படும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் ஸஹ்ரான் ஹாசிமின் சகோதரனான ரிழ்வானின் இல்லத்திலிருந்து தற்கொலை அங்கி உட்பட பெருமளவு பொருள்கள் நேற்று வியாழக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், ரிழ்வானின் மாமா மற்றும் மாமி இருவரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸஹ்ரானின் சகோதரரான ரிழ்வான், சாய்ந்தமருது தற்கொலைக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தார். ரிழ்வானின் மனைவியும் பிள்ளைகளும் அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். அவர்களுடைய காத்தான்குடி வீட்டிலிருந்தே தற்கொலை அங்கி உட்பட பெருமளவு பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

தற்கொலை அங்கி, நான்கு அலைபேசிகள், ஏ.ரி.எம். அட்டைகள், வங்கிப் புத்தகம், ரிழ்வான் தம்பதிகளின் நான்கு குழந்தைகளின் ஒளிப்படங்கள், ரிழ்வானின் தேசிய அடயாள அட்டை உட்படப் பல பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போதே இந்தப் பொருள்கள் சிக்கின என்று காத்தான்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி தெரிவித்தார். அவ்வீட்டிலிருந்த ரிழ்வானின் மாமா மற்றும் மாமி ஆகியோரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-22)


## இரண்டாம்...


டைந்துள்ள கற்றல் நடவடிக்கைகளுக்காக, ஓகஸ்ட் மாத இரண்டாம் தவணை விடுமுறை காலத்தைக் குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைள் கடந்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருந்தன. எனினும், கடந்த 21ஆம் திகதி இடம் பெற்ற தாக்குதலை அடுத்து, இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கும் நாள் பிற்போடப்பட்டது. இதன்படி எதிர்வரும் 6ஆம் திகதியே மேற்படி கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்துள்ள கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பாதுகாப்புத் தரப்புடன் கலந்துரையாடியதன் பின்னரே திங்கட்கிழமை இரண்டாம் தவணைக்கு பாடசாலைகளை திறக்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டார். கடந்த இரண்டு வாரங்களாக பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக விடுமுறை கிடைத்துள்ளது.

இனி கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் சாதாரணத் தரப்பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயாராக வேண்டும். எனவே எதிர்வரும் காலத்தில் விடுமுறைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கட்டாரில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்காக 11 கால்பந்தாட்ட அரங்குகளை கட்டார் அமைத்து வருகிறது. ஆறின் ஒளிப்படங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நிலையில் இன்னும் மூன்று அரங்குகளின் ஒளிப்படங்கள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. தலா 60 ஆயிரம் ரசிகர்கள் அமரும் வகையில் இந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டாரில் அதிக வெப்பம் நிலவுவதால் முழுவதும் குளிரூட்டப்பட்ட நிலையில் இந்த மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ம)



# ஐ.பி.எல். போட்டியில் வருண் விலகல்

ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் இடம் பெற்றிருந்த சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி கடந்த மாத தொடக்கத்தில் பயிற்சியின் போது விரலில் காயமடைந்தார். காயத்துக்கு சிகிச்சை பெற்ற அவர் தொடர்ந்து ஓய்வில் இருந்தார். இந்த நிலையில் குறிப்பிட்ட காலத்துக்குள் காயத்தில் இருந்து மீண்டு வராததால் எஞ்சிய ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து நேற்று விலகினார்.

அடிப்படை விலையாக 20 லட்சம் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்த வருண் சக்ரவர்த்தி ஆச்சரியப்படும் வகையில் 8.4 கோடிக்கு ஏலம் போனார். கொல்கத்தாவுக்கு எதிரான ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டும் களம் இறங்கிய அவர் 3 பந்துப்பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கை வீழ்த்தினார். இதில் அவரது அறிமுக பந்துப்பரிமாற்றத்திலேயே கொல்கத்தா அணியினர் 25 ஓட்டங்களை விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளங்கதிர் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், மே 3
வல்வை விளையாட்டுக் கழகம் வல்வைக்கு உட்பட்ட கழகங்களிடையே நடாத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 9:0 என்ற கோல் கணக்கில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி சார்பில் கபில் 4 கோல்களையும், பிரசாந், மதுசாந் இருவரும் தலா 2 கோல்களையும், ஜெயதாஸ் ஓர் கோலினையும் பதிவு செய்தார்கள். (ஒ.23)



# நேதாஜி வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், மே 3
வல்வை விளையாட்டுக் கழகம் வல்வைக்கு உட்பட்ட கழகங்களிடையே நடாத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ரேவடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழக அணி மோதியது.
2:0 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
நேதாஜி விளையாட்டுக்கழக அணி சார்பில் ரசிகரன், கோபி இருவரும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தார்கள். (ஒ.23)



# பெயரை விட ‘தல’ சிறப்பு

## டோனி நெகிழ்ச்சி

ரசிகர்களால் தான் ‘தல’ என்று அழைக்கப்படுவது குறித்து சென்னை அணித் தலைவர் டோனி நெகிழ்ச்சியாக பதில் அளித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டியில் சென்னை அணி டெல்லி அணியை வீழ்த்தி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் ஆட்டநாயகன் விருது பெற்ற டோனியிடம் வர்ணனையாளர் ‘தல’ என ரசிகர்கள் அழைப்பது குறித்து கேட்ட போது; டோனி தெரிவித்ததாவது:
“தல” என்ற பெயரை பெற்றது மிகவும் சிறப்பானது. எனக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய செல்லப் பெயர் இது. சென்னை அணியின் அறிமுக பாடலிலேயே இந்தப் பெயர் இடப்பெற்றுள்ளதை நான் அறிந்திருக்கவில்லை.
அந்தப் பாடலில் அங்கமாக ‘தல’ என்ற பெயர் இருந்தத்தை நான் சில ஆண்டுகளுக்கு பின்னர்தான் அறிந்தேன். தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவில் நான் எங்கு சென்றாலும் அவர்கள் என் பெயரை சொல்லி அழைப்பதில்லை. ‘தல’ என்றுதான் அழைக்கிறார்கள். இது நிச்சயம் சிறப்பானது. அவர்கள் என்னை மட்டும் ஆதரிக்கவில்லை ஒட்டு மொத்த அணியையும் ஆதரிக்கிறார்கள்- என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டியா ஆடாதபோதே ஜடேயாவுக்கு வாய்ப்பு

## கங்குலி தெரிவிப்பு

ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண போட்டியில் இங்கிலாந்து பிட்ச், வானிலை உள்ளிட்ட சூழ்நிலைகளுக்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய சகலதுறை ஆட்டக்காரர் விஜய் சங்கரின் பந்து வீச்சு உதவிகரமாக இருக்கும் என்று கூறிய கங்குலி, உலகக் கிண்ணத்தில் இந்திய அணி எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

விஜய் சங்கர் நிச்சயம் நன்றாக ஆடுவார், அவர் நல்ல இளம் கிரிக்கெட் வீரர். அவரது பந்து வீச்சு உதவிகரமாக இருக்கும். ஆஸ்திரேலியா, நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் அவர் நன்றாக ஆடியதால்தான் இந்திய அணியில் இடம் பெற்றார்.

இந்திய அணிக்கு சகலதுறை ஆட்டக்காரராக பின்வரிசையில் ஹர்திக்பாண்டியா வுக்குத்தான் முதல் வாய்ப்பு, பாண்டியா காயம் அடைந்தால்தான் ஜடேஜாவுக்கு, வாய்ப்பு. இதன் மூலம் 3 வேகப்பந்து வீச்சாளர்களை களமிறக்க முடியும்.

கடந்தமுறை ஒன்றிரண்டு பலவீனமான அணிகள் ஒவ்வொரு பிரிவிலும் இருக்கும். இந்த முறை இது வாய்ப்பில்லை. மேற்கிந்தியத் தீவுகள் அணி வலுவாக உள்ளது. ஆஸ்திரேலியாவும் தங்கள் இடத்தை உறுதி செய்துள்ளது. நியூஸிலாந்து வலுவானது, இந்தியா வலுவானது, பாகிஸ்தான் அணி இங்கிலாந்தில் நன்றாக விளையாடக் கூடியது- என்றார்.





# எம்.சி.சி தலைவராக சங்கக்கார நியமனம்

லண்டனில் அமைந்துள்ள மேரிலெபோன் கிரிக்கட் கழகத்தின் தலைவராக இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டன் குடியுரிமை இல்லாத ஒருவரை அந்தக் கழகத்தின் தலைவராக நியமிப்பது இதுவே முதன்முறையாகும்.

சங்கக்காரவின் பதவிக்காலம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகி ஒரு வருடத்துக்கு நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேரிலெபோன் கிரிக்கெட் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் லோட்ஸில் இடம்பெற்றது. இதன்போது தற்போதைய தலைவர் அந்தோனி ரைபோர்ட், கழகத்தின் அடுத்த தலைவராக குமார் சங்கக்காரவை அறிவித்தார்.

உலகக் கிரிக்கெட்டின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் எம்.சி.சி, கிரிக்கெட் விதிமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# செய்யிறதும் தெரியாது சொல்லுறதும் தெரியாது

## தாஹீர் ருசிகரம்

12 ஆவது ஐ.பி.எல். போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை - டெல்லி அணிகள் மோதின. இதில் சென்னை அணி 80 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதில் சென்னை அணியின் வீரர் இம்ரான் தாஹீர் 4 இலக்குகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார்.

இந்த வெற்றி குறித்து தாஹீர் தெரிவிக்கையில்:


சில பேர் செஞ்சுட்டு சொல்றாங்க. சென்னை அணி செய்யுறதும் தெரியாது, சொல்றதும் தெரியாது. எல்லாரும் எதிர் பாக்குறத நாங்க செய்யமாட்டோம். நாங்க செய்ய போறது என்னன்னு யாரும் எதிர்பார்க்கவும் முடியாது. எடுடா வண்டிய போடுடா விசில- என்றார்.

# ஹர்பஜன் சிங் ருசிகர ருவிற்


சென்னை - டெல்லி அணிகள் மோதிய போட்டியில் சென்னை அணி 80 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் பின்னர் சென்னை அணி வீரர்கள் தங்களது ருவிற்றர் பக்கத்தில் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். ஹர்பஜன் சிங் வெற்றி குறித்து விஸ்வாசம் படப் பாணியில் தெரிவித்தார்.

ஹர்பஜன் சிங் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்ததாவது;

இஞ்யார்ரா, பேர் சென்னை சுப்பர் கிங்க்ஸ். ஊர் சென்னை, சம்பவ இடம் சேப்பாக்கம், தலைவர் பேர் தல, ஒத்தைக்கு ஒத்தையா வந்து ஐ.பி.எல்லில் நின்னுப்பாருங்க! வேற லெவலில் ஆட்டம்போட தயாரா இருக்காங்க. நாங்களும் தயார்! ரசிகர்களின் உறுதுணைக்கு நன்றி - என்றார்.



# மீண்டும் முதலிடத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்







டோனியின் அதிரடி, தாஹீரின் துல்லியமான பந்து வீச்சு என சென்னை அணி அசத்தி மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது.

12ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை - டெல்லி அணிகள் மோதின. இதில் சென்னை அணி 80 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் சென்னை அணியைத் துடுப்பெடுத்தாட பணித்தது. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்னா 59 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும், டு பிளசிஸ் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணி 16.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்தது 99 ஓட்டங்களை மாத்திரமே பெற்று படுதோல்வியடைந்தது.

பந்து வீச்சில் இம்ரான் தாஹீர் 4 இலக்குகளையும், ஜடேஜா 3 இலக்குகளையும், ஹர்பஜன்சிங், சாஹர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சென்னை அணி வீரர் டோனி தெரிவு செய்யப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியல் மட்ரிட்டை வீழ்த்தி வலிக்கனோ அசத்தல்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம் பெற்று வரும் லா லிகா தொடரில் இடம் பெற்ற போட்டியொன்றில் வலிக்கனோ அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

வலிக்கனோ - ரியல் மட்ரிட் மோதிய போட்டியில் முதல் பாதி ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் வலிக்கனோ அணிக்கு ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது அதனை அந்த அணியின் வீரர் எம்பராவ் கோலாக மாற்ற முதல் பாதி ஆட்டத்தில் வலிக்கனோ அணி 1: 0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் ரியல் மட்ரிட் வீரர்கள் கோல்களை அடிப்பதற்கு பல்வேறு முனைகளில் முயற்சித்த போதிலும் அவர்களால் கோல்கள் எதனையும் போட முடியாமல் போனது. இரண்டாம் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரையிலும் இரு அணிகளாலும் கோல்கள் பெறப்படத நிலையில் வலிக்கனோ அணி 1: 0 என்ற கணக்கில் வெற்றி ரியல் மட்ரிட்டை வீழ்த்தி வெற்றி பெற்றது.



**போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்**

**ஆசிரியர் தெரிவு பரீட்சைக்கு**
சமயபாட ஆசிரியர் தெரிவு பரீட்சை இம்மாதம் 25ஆம் திகதி நடைபெறும்.
சனி, ஞாயிறு
9.00 → 2.00

**வருமானப் பரிசோதகர் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்**
பிரிவு I
சனி 9.00 → 1.00
பிரிவு II
ஞாயிறு 9.00 → 1.00

**சட்டமானி, பதிவாளர், புள்ளி விவரவியலாளர்**
சனி 9.00 → 3.00

**SLAS, SLEAS**
ஞாயிறு 9.00 → 4.00

**சிறைச்சாலை ஜேலர் தரம் II புனர்வாழ்வு உத்தியோகத்தர் சிறைக்காவலர்**
சனி 10.30 → 3.00

தொடர்புகளுக்கு,
**076 688 3394**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

**கருத்தரங்குத் தொடர் 8**
SLAS, SLEAS, SLFS
பதிவாளர்
வருமான பரிசோதகர்,
நீதிமன்ற எழுதுநர்,
சமயபாட ஆசிரியர்,
வடமாகாண ஆசிரியர், LLB,
சிறைக்காவலர்,
புள்ளி விபரவியலாளர்
போன்ற பரீட்சைகளுக்கானது
காலம் : 04.05.2019
சனி : 9.00 - 2.00 pm
உளச்சார்பு, பொது அறிவு, முகாமைத்துவம், ஆங்கிலம் கிரகித்தல்.
**P . கமல்தாசன் SLPS மற்றும் வளவாளர் குழாம்**
எதிர்பார்க்கை நல்ல மாற்றங்களை உள்ளடக்கியது
K. குமணன் SLPS
P.N . சுதர்சன் SLEAS
K. சத்தியமூர்த்தி AO
A.K. கீர்த்திராஜன் MA
**நாவலர்**
கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T. P : 077 111 6739,
077 386 7222




## மெஸ்ஸி கலக்கல்
# பார்சிலோனா அபார ஆட்டம்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம் பெற்று வரும் சம்பியன் லீக் போட்டியில் நேற்று இடம்பெற்ற போட்டியில் பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

பார்சிலோனா - லிவர்பூல் அணிகள் மோதிய போட்டியில் 26ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் சுராஜ் ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலி ருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு முட்டி மோதி ஆட ஆரம்பித்தனர். 75ஆவது, 82 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் மெஸ்ஸி அதிரயாக 2 கோல்களை அடுத்தடுத்து போட்டார். ஆட்டத்தின் இறுதியில் பார்சிலோனா அணி 3: 0 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.





# மெஸ்ஸி 600



பார்சிலோனா கழக அணியின் முக்கிய வீரராக விளங்கும் மெஸ்ஸி அந்த அணிக்காக இது வரை 600 கோல்களை அடித்துள்ளார். நேற்று இடம்பெற்ற போட்டியில் இவர் 2 கோல்களை அடித்ததன் மூலம் 600 கோல்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையைப் பெற்றுள்ளார்.

இவர் லா லிகா தொடரில் 417 கோல்களும், சம்பியன் லீக் தொடரில் 112 கோல்களும், கோபா டீ ரே போட்டியில் 50 கோல்களும், ஸ்பானிஸ் சுப்பர் கப் போட்டியில் 13 கோல்களும், கழக உலகக் கிண்ண போட்டியில் 5 கோல்களும், ஐரோப்பிய சுப்பர் கப் போட்டியில் 3 கோல்களும் அவர் பார்சிலோனா அணிக்காக அடித்துள்ளார்.

இதற்று முன்னர் கிறிஸ்ரியனோ ரொனால்டோ ஐரோப்பிய கழகங்களில் முதல் முதலாக 600 கோல்களை அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org